Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 13, 2022

திங்கட்கிழமை ஜூன் 13, 2022 | ஒளி: 08 கதிர்: 021 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## புனித அந்தோனியார் திருநாள் இன்று

கட்டுரை P3



குருந்தூரில் புத்தர் சிலை

## நிறுவுதல் தடுத்து நிறுத்தம்

விஜயரத்தினம் சரவணன்

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில், முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி, 'கபோக்' கல்லினாலான புத்தர் சிலையை நிர்மாணிப்பதற்கும், அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையின் கலசத்துக்குரிய விசேட பூசைவழிபாடுளை மேற்கொள்வதற்குமாக நேற்று (12) முன்னெடுக்கப்பட்ட முயற்சி, தமிழ் மக்கள் மற்றும், மக்கள் பிரதிநிதிகளின் ஆர்ப்பாட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டது. குருந்தூர் மலை தொடர்பில் ஏற்கெனவே முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று, குருந்தூர்மலையில் எவ்வித மதக் கட்டுமானங்களும் மேற்கொள்ளக்கூடாதென முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றால் உத்தரவிடப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

விஹாரைகள், தேவாலயங்கள் கதையை

# வாபஸ் பெறேன்



மே மாதம் 9ஆம் திகதியன்று வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டமை உள்ளிட்ட கலவரங்களின் பின்னணியில் சில மதத் தலைவர்கள் இருப்பதாகவும் கலவரங்களில் ஈடுபட்டவர்களுக்கு குறித்த மதத் தலைவர்களின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளதாகவும் தான் வெளியிட்ட அறிவிப்பை எக்காரணம் கொண்டும் வாபஸ் பெற போவதில்லை என, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மனசாட்சிக்கு அமைய பேசும் நான், எப்போதும் இனவாதம், மதவாதத்தை அடிப்படையாக வைத்து அரசியல் செய்யவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

மே மாதம் 9ஆம் திகதி வன்முறையாளர்களால் தீ வைக்கப்பட்ட கம்பஹா- உடுகம்பள பகுதியிலுள்ள தனது வீட்டை நேற்று முன்தினம் (11) பார்வையிடச் சென்ற போதே, ஊடகங்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "எனது வீட்டில் இரண்டு அரச வாகனங்கள் இருந்தன. பாராளுமன்றத்தில் எனக்கு வழங்கப்பட்ட பொருட்கள் உள்ளிட்ட ஆவணங்களும் இருந்தன. அவை அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன.

"இது தனது தந்தையின் இடம். 88, 89ஆம் ஆண்டுகளில் இந்த வீட்டில் பலரின் உயிர்களைக் காக்க முடிந்தது. இந்த வீட்டில் பிள்ளைகளுக்காக இலவச வகுப்புகள் நடைபெற்றன. அனைத்தும் இன்று இல்லாமல் போயுள்ளன" என்று சுட்டிக்காட்டினார்.

"இந்த வீடு எரிப்பு சம்பவங்களின் பின்னணியில் குடு வர்த்தகர்கள் உள்ளனர். அவர்கள் அனைவர் தொடர்பிலும் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. வீட்டுக்கு தீயிட்டனர் என்பதற்காக அரசியலை கைவிடமாட்டேன்.

தொடர்ச்சி P2

ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய் கொள்வனவு செய்ய

## நிர்ப்பந்தம் ஏற்படலாம்

### இலங்கையின் நிலை கண்டு வருந்துவதாக பிரதமர் ரணில் தெரிவிப்பு



தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்க ரஷ்யாவிடம் இருந்து மசகு எண்ணெய் கொள்வனவு செய்வதற்கு இலங்கை தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ரஷ்யாவிடம் இருந்து அதிக எண்ணெயை கொள்வனவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கைக்கு ஏற்படலாம் என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய இக்கட்டான நிலை, அதன் சொந்த உருவாக்கம் என்பதை ஒப்புக்கொண்ட பிரதமர், குடிமகனாகவும் பிரதமராகவும் தனது தேசம் துன்பப்படுவதைப் பார்த்து மிகவும் வருத்தப்படுவதாக கூறினார்.

தொடர்ச்சி P2

எரிபொருள் நிலையங்களில்

## கோட்டா முறையில் வாராந்தம் எரிபொருள்



எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாவனையாளர்களை பதிவுசெய்து, கோட்டா முறையில் வாராந்தம் எரிபொருளை வழங்குவதை தவிர வேறு வழியில்லை என்று தெரிவித்த மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, ஜூலை முதல் வாரத்திலிருந்து இந்த நடைமுறை பின்பற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் நேற்று (12) வெளியிட்ட பதிவிலேயே இவ்விடயத்தை அவர் குறிப்பிட்டிருந்தார்.

24 மணி நேரமும் மின்சாரத்தை வழங்கவும் நிலையான எரிபொருள் விநியோகம் சாத்தியமாகும் வரையும் வாராந்தம் கோட்டா முறையில் எரிபொருள் விநியோகிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## 5 வருடங்களில் நாட்டை ஐ.ம.கூ கட்டியெழுப்பும்

உண்மையான மக்கள் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன இன்னும் ஐந்து வருடங்களுக்குள் இந்நாட்டை நிச்சயமாக கட்டியெழுப்பும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மன்னார் காற்றாலை மின் திட்டம்

## எவருக்கும் அழுத்தம் விடுக்கவில்லை



மன்னாரில் நிர்மாணிக்கப்படவுள்ள காற்றாலை மின் திட்டத்தை கையளிப்பது தொடர்பில் தாம் எந்தவொரு தனிநபருக்கோ அல்லது நிறுவனத்துக்கோ அழுத்தங்களை விடுக்கவில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


இலங்கை மின்சார சபையின் தலைவர் பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுவில் தெரிவித்த கருத்தை தாம் வன்மையாக நிராகரிப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இலங்கையின் கொள்கையானது ஒவ்வொரு செயற்றிட்டத்தையும் மிகவும் வெளிப்படையாகவும் பொறுப்புடனும் உரிய முறைமையிலும் வழங்குவதாகும்.

தொடர்ச்சி P2

## 31,725 கடவுச்சீட்டுகள் 10 நாள்களில் விநியோகம்

### இன்றும் திறந்திருக்கும்



குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் இம்மாதத்தின் முதல் 10 நாள்களில் 31,725 கடவுச்சீட்டுகளை விநியோகித்துள்ளது என குடிவரவு மற்றும் குடியகல்வு பிரதி கட்டுப்பாட்டாளர் பியூமி பண்டார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மதுகொடுத்து நகை அபகரிப்பு

பேஸ்புக்கின் மூலம் நண்பர்களாகிய இருவர், விடுதியொன்றுக்குச் சென்றுள்ள நிலையில், அங்குவந்த ஆண் நண்பருக்கு, மதுபானத்தை கொடுத்த பெண் நண்பி, அவர் போதையில் இருந்த சமயத்தைப் பார்த்து, பெறுமதியான நகைகள் மற்றும் பணத்தை அபகரித்து சென்றுள்ள சம்பவமொன்று திஸ்ஸமஹாராகமையில் இடம்பெற்றுள்ளது.

ஆண் நண்பரிடமிருந்து 15 பவுண் நகைகள் மற்றும் அவரிடமிருந்த பணம் அவ்வளவையும் சுருட்டிக்கொண்டு அப்பெண் தலைமறைவாகிவிட்டார். அபகரித்துச் சென்ற நகைகளின் பெறுமதி 27 இலட்சத்துக்கு 50 ஆயிரம் ரூபாயென மதிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## கருத்தை வாபஸ் பெற்றார் மின்சார சபைத் தலைவர்



பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுவில் (கோப்) தெரிவித்த கருத்தை வாபஸ் பெறுவதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி. பெர்டினான்டோ அறிவித்தார்.

இது குறித்து கோப் குழுவின் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது,

கடந்த வெள்ளிக்கிழமை (10) இடம்பெற்ற கோப் குழு கூட்டத்தில் 500 மெகாவோட் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உற்பத்தி செய்ய அதானி கிரீன் எனர்ஜி லிமிடெட் உடன் முன்மொழியப்பட்ட மன்னார் மற்றும் பூநரி காற்று மற்றும் சூரிய சக்தி திட்டம் தொடர்பாக 25.11.2021 வெளியிடப்பட்ட கடிதம் குறித்து விளக்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜூலைக்குள் 21ஐ நிறைவேற்ற வேண்டும்



அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் ஜூலை மாதத்துக்குள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று தெரிவித்த பாரளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தின் அதிருப்திக்கு இலங்கை ஆளாக நேரிடும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



1.5 பில். டொலர் ஒப்பந்தத்தை


## நிராகரித்தது சீனா

இலங்கை நிபந்தனைகளை பூர்த்தி செய்ய முடியாமை காரணமாக இலங்கையுடனான 1.5 பில்லியன் டொலர் பெறுமதியான பரிவர்த்தனை ஒப்பந்தத்தை சீன அரசாங்கம் நிராகரித்துள்ளதாக சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவுக்கான இலங்கை தூதுவர் பாலித கொஹொன, சீனாவின் ஆசிய விவகாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் லியு ஜின்சோங்கை பீஜிங்கில் சந்தித்த போதே, சீன அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெரிவித்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீன நிதி நிறுவனங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறுவது குறித்து கவலை கொண்ட அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகள் உட்பட, உள் மற்றும் வெளிப்புற காரணிகளால் சீனா, பொருளாதார மந்தநிலை மற்றும் பணப்புழக்க சிக்கலை சந்தித்து வருவதாக சீன பணிப்பாளர் விளக்கமளித்துள்ளார்.

தொடர்ச்சி P2



மே 9 வன்முறை விவகாரம்


## 857 சம்பவங்களில் 2,725 பேர் கைது

மே மாதம் 9 ஆம் திகதி, நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில், ஒவ்வொரு நாளும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்கின்றன எனத் தெரிவித்துள்ள பொலிஸ் தலைமையகம். விவரமொன்றையும் வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஆஸிக்கு படகில் செல்ல முயன்ற 38 பேர் கைது

கனகராசா சரவணன்



நீர்கொழும்பில் இருந்து இயந்திர படகின் ஊடாக, அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முயன்ற 38 பேரை தென்கிழக்கு கடலில் வைத்து கடற்படையினர் நேற்று (12) ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் கைதுசெய்து அம்பாறை, பானம பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## நிறுவுதல் தடுத்து..

இவ்வாறு நீதிமன்றினால் வழங்கப்பட்ட உத்தரவினை மீறி அங்கு தொல்பொருள் அகழ்வாராட்சி என்னும் போர்வையில் புதிதாக பாரிய அளவில் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவ்வாறு அமைக்கப்பட்ட புதிய விகாரைக்குரிய விசேட பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கும், 'கபோக்' கல்லினால் ஆன புத்தர் சிலை ஒன்றினை குருந்தூர் மலையில் நிறுவுவதற்கும் பௌத்தபிக்குகள் மற்றும், பௌத்தாலோக நற்பணிமன்றம், தென்னிலங்கையைச் சார்ந்த பெரும்பாண்மை இனத்தவர்கள் ஆகியோர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

குறிப்பாக கடந்த பல நாள்களுக்கு முன்பிருந்தே இந்த விசேட வழிபாடுகளுக்குரிய ஏற்பாடுகளில் முப்படையினர் இணைந்து முன்னெடுத்தி ருந்ததுடன், முப்படையினர் இராணுவ உடையின்றி, சிவில் உடைகளில் இந்த வழிபாடுகளுக்குரிய செயற்பாடுகளில் நேற்று (12) ஈடுபட்டிருந்தனர்.

இந்த விசேட வழிபாடுகளுக்கு தென்னிலங்கையில் இருந்து பெருந்திரளான பெரும்பான்மை இனத்தவர்களும் பௌத்த பிக்குகளும் அதி சொகுசு வாகனங்கள் மற்றும் பஸ்கள் மூலம் வருகைதந்திருந்தனர்.

இவ்வாறாக வழிபாட்டு முயற்சிகள் இடம்பெறுவதற்கு அப்பகுதித் தமிழ் மக்கள் மற்றும், பாராளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான கி.சிவலிங்கம், இ.கவாஸ்கர், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவன் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டவர்கள் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் ஆர்ப்பாட்டத்திற்கென வருகைதந்த மூவரை வழிமறித்த பொலிஸார் அவர்களைத் தாக்கி கைதுசெய்து, பின்னர் விடுவித்திருந்தனர்.

தொடர்ந்து குறித்த பகுதிக்கு தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அநுரமானதுங்க வருகைதந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டாருந்தவர்களுடன் கலந்துரையாடியதுடன், குருந்தூர் மலையையும் பார்வையிட்டிருந்தார்.

அதன்போது கருத்துத் தெரிவித்த அநுரமானதுங்க, குருந்தூர்மலைப் பகுதியில் தொல்லியல் ஆய்வின்மூலம் கிடைத்த எச்சங்களை பேணிப் பாதுகாப்பதற்காக புனர்நிர்மாணம் செய்யும் வேலைகளையே தாம் முன்னெடுப்பதாகவும், அங்கு புதிதாக கட்டடங்கள் எதனையும் தாம் கட்டவில்லை எனவும் தெரிவித்தார்.

அத்தோடு தமது திணைக்களத்துக்கும், பௌத் துறவிகளுக்கும் இராணுவத்துக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை எனவும் தெரிவித்தார்.

இருப்பினும் அவர் தெரிவித்த கருத்துக்கு மாறாக முன்பிருந்ததைவிட குருந்தூர் மலையில் பெரிய பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன், தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள குருந்தூர்மலையில் பெருமளவான, பௌத்த பிக்குகளும், முப்படையினரும் வழிபாடுகளுக்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

அதேவேளை, இதன்போது குருந்தூர் மலையைச்சூழ உள்ள வயல்நிலங்கள் தொல்லியல் இடமெனக்கூறி, பௌத்தபிக்கு தமிழ் மக்களைத் தடுப்பது தொடர்பிலும் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அநுரமானதுங்கவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அவ்வாறு பௌத்த பிக்குகள் தடுப்பதற்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என அவர் அதற்குப் பதிலளித்திருந்தார்.

தொடர்ந்து தமிழ் மக்கள் மற்றும், மக்கள் பிரதிநிதிகளின் ஆர்ப்பாட்டம் காரணமாக குறித்த விசேட வழிபாட்டு முயற்சிகள் நிறுத்தப்பட்டது.

அந்தவகை யில் முன்னெடுக்கப்பட்ட விசேட வழிபாடுகளுக்கான முயற்சிகள் நிறுத்தப்பட்டதுடன், பிறிதொருநாளில் இந்த விடயம் தொடர்பில் தமிழ் மக்கள் பிரதிநிதிகள், தமிழ் மக்கள், இதனோடு தொடர்புடைய திணைக்களங்கள், அமைச்சர் உள்ளிட்டவர்களுடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்வதெனவும் முடிவெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## 5 வருடங்களில் நாட்டை ஐ.ம.கூ கட்டியெழுப்பும்

புவக்பிட்டிய பென்ட்ரிக் தோட்ட மக்களுக்கான குடிநீர் கட்டமைப்பை கையளிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் (11) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அரசாங்கம், மக்கள் அபிப்பிராயத்தை அப்பட்டமாக மீறி, அதை கிடப்பில் போட்டதாகவும், மக்களுக்கு துரோகம் செய்து நாட்டை கட்டியெழுப்ப முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தோல்வியடைந்த அரசாங்கம் இன்று ஆடைகளை மாற்றிய வண்ணம், ஒவ்வொரு நபர்களை மாற்றி அதிகாரத்தை உறுதிப்படுத்த முயன்றாலும்,இதிலிருந்து இந்நாட்டின் அழிவுப் பாதை நிற்காது எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய மக்கள் அபிப்பிராயத்தின் மூலம் இந்நாடு கட்டியெழுப்பட வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நிலையற்ற தன்மைகளால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியும் கலந்துகொண்டிருந்தார்.

## மதுகொடுத்து நகை அபகரிப்பு

ஆண் நண்பர் வந்திருந்த காரையும் எடுத்துச் சென்ற அப்பெண், அக்காரை திஸ்ஸவாவிக்கு அருகில் நிறுத்திவிட்டு தலைமறைவாகியுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு ஏமாற்றியுள்ளார் என அறியமுடிகின்றது. கொரியாவுக்கு வேலைக்குச் சென்று, கடந்த நாள்களில் நாடு திரும்பிய நபரிடமே இவ்வாறு நகைகள், பணம் அபகரிக்கப்பட்டுள்ளன என விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

## வாபஸ் பெறேன்

"இதை சவாலாக வைத்துக் கொண்டு வலுவான அரசியல்வாதியாக முன்வருவேன். இந்தக் குற்றங்களை செய்தவர்களை சட்டமும் இயற்கையும் தண்டிக்கும். அந்த நாளை மிகவும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்துள்ளேன்" என்றார்.

"இந்தச் சம்பவங்களின் பின்னணியில் சில பிக்குமாரைப்போலவே, பாதிரியார்களும் உள்ளனர். எனது வீட்டுக்கு தீ வைப்பதற்கு 3 நாள்களுக்கு முன்னர் 3 பாதிரியார்கள் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் வருகை தந்து, வீட்டின் முன்பாக மலர் வளையம் ஒன்றை வைத்துச் சென்றுள்ளனர்.

"நான் எப்போதும் பொய் சொல்வதில்லை. எனது மனசாட்சிக்கு அமையவே செயற்படுவதால் நான் பயப்பட போவதில்லை" என்று குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தான் தெரிவித்த கருத்தை நிராகரிப்பதாக அருட்தந்தை சிறில் காமினி கூறியுள்ளார் என்றும் அந்தக் கருத்தை நிராகரிக்க வேண்டாம் எனவும் ஆராய்ந்து பார்க்குமாறும் குறிப்பிட்ட அவர், தான் இப்போது சாட்சிகளுடனேயே பேசுவதாகவும் தெரிவித்தார்.

தான் திருமணம் முடித்துள்ளது தமிழ் இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ பெண்மணியொருவரை எனத் தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அதனால் தன்னை இனவாதம், மதவாதத்தை தூண்டுபவன் என்று குற்றம் சுமத்த முடியாது எனவும் அதனைப் பயன்படுத்தி தான் எப்போதும் அரசியல் செய்யவில்லை; செய்யப் போவதுமில்லை என்றும் தெரிவித்தார்.

## எவருக்கும் அழுத்தம்..

இலங்கைக்கு மின்சக்தி அத்தியாவசியமாக உள்ள இச்சந்தரப்பத்தில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறை தொடர்பில் பாரியளவிலான திட்டங்களுக்கு கிடைக்கும் கேள்வி குறைவாக உள்ளதால், அவை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டாலும், செயற்றிட்டங்களுக்காக நிறுவனங்களைத் தெரிவு செய்யும்போது அரச கொள்கைகளுக்கேற்ப வெளிப்படையான செயல்முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.


## கருத்தை வாபஸ் பெற்றார்...

இந்தக் கலந்துரையாடலின் போது, இந்த உத்தியோகபூர்வ கோரிக்கைக் கடிதத்தை வழங்குமாறு என் மீது சுமத்தப்பட்ட அழுத்தங்கள் மற்றும் நியாயமற்ற குற்றச்சாட்டுகள் காரணமாக நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டேன் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே எதிர்பாராத அழுத்தம் மற்றும் உணர்ச்சிகளின் காரணமாக இந்திய பிரதமரால் வலியுறுத்தப்பட்டது என்ற வார்த்தை முற்றிலும் தவறானது. எனவே, சம்பந்தப்பட்ட வார்த்தைகளை திரும்பப் பெற்று, நிபந்தனையின்றி எனது மன்னிப்பை பதிவு செய்ய விரும்புகிறேன் என்றும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கருத்தை வாபஸ் பெறும் தமது நிலைப்பாட்டுக்கு ஜனாதிபதி, விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் அல்லது இந்திய தூதரகத்தினால் அழுத்தம் விடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி ஜனாதிபதி தன்னை அழைத்து இந்தச் செயற்றிட்டத்தை அதானி நிறுவனத்திடம் வழங்குமாறு தெரிவித்ததாக கோப் குழுவில் ஆஜராகிய இலங்கை மின்சார சபையின் தலைவர் குறிப்பிட்டிருந்ததுடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அழுத்தம் விடுத்ததாகவும் அவர் விசாரணையின் போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## 857 சம்பவங்களில் 2,725 பேர் கைது

நேற்று(12) காலை நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் (11) கைதுசெய்யப்பட்ட 22 பேரில், 08 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மே.9 மற்றும் அதனை அண்மித்த நாள்களில் இடம்பெற்ற 857 வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 2,725 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் அவர்களில் 1,083 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் திணைக்களம் நேற்று(12) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிராகரித்தது சீனா

இலங்கை முறையான கோரிக்கையை விடுக்கும் பட்சத்தில் டீசல் மற்றும் உரம் வழங்குவது குறித்து சீனா பரிசீலிக்க முடியும் எனவும் பணிப்பாளர் நாயகம் லியு ஜின்சோங் மேலும் தெரிவித்தார்.

## ஆஸிக்கு படகில் செல்ல முயன்ற 38 பேர் கைது

கடற்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று (12) அதிகாலை 2 மணியளவில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, அவுஸ்திரேலியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த படகை சுற்றிவளைத்து இடைமறித்து சோதனையிட்டனர்.

அதில் சட்டவிரோதமாக 38 பேர் இருப்பதை கண்டுபிடித்து அவர்களை கைது செய்து கரைக்கு கொண்டுவந்து பானம பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அதில், 2 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இருந்துள்ளனர்.

மனித கடத்தல் வர்த்தகத்தில் ஈடுபடுவோர் என இனங்காணப்பட்ட அறுவர், ஆண்கள் 26 பேர், பெண்கள் ஐவர் மற்றும் சிறுவர்கள் 7 பேரும் கைது செய்யப்பட்டவர்களுள் அடங்குகின்றனர்.

இதனையடுத்து அந்தப் படகை, கடலில் இருந்து வாழைச்சேனை கடற்படை முகாமுக்கு இழுத்துச் சென்றுள்ளதாகவும் இதில் கைது செய்யப்பட்டவர்கள், நீர்கொழும்பு, யாழ்ப்பாணம். மட்டக்களப்பு பிரதேசங்களை சேர்ந்வர்கள் எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்

## நிர்ப்பந்தம் ஏற்படலாம்

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையின் காரணமாக சில சமயங்களில் அதிகாரிகள் தாங்கள் என்ன எண்ணெய் வாங்குகிறார்கள் என்பது தெரியாமல் போவதாக குறிப்பிட்ட பிரதமர், வளைகுடாவை தனது பிரதான விநியோக நாடாக இலங்கை நோக்குவதாகவும் உறுதியளித்தார்.

உக்ரேனில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பில் பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும் ரஷ்யா, இலங்கைக்கு கோதுமையை வழங்கியிருந்ததையும் பிரதமர் உறுதிப்படுத்தினார்.

உக்ரைன் நெருக்கடி காரணமாக இந்த ஆண்டு இறுதிக்குள் உலகளாவிய உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்றும், 2024 ஆம் ஆண்டு வரை அது தொடரும் என்றும் பிரதமர் எச்சரித்துள்ளார்

உக்ரைன் நெருக்கடியானது இலங்கையின் பொருளாதாரச் சுருக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்ட பிரதமர், இவ்வருட இறுதிக்குள் ஏனைய நாடுகளின் தாக்கத்தை காணமுடியும் என கணித்துள்ளார்.

இலங்கையின் கடன் அதிகரித்துள்ள போதிலும், சீனாவிடமிருந்து அதிக நிதி உதவிகளை ஏற்கத் தயாராக இருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், பொருளாதார மீட்சிக்கு தேவையான திட்டங்களை அரசாங்கம் கண்டறிந்து, அந்த திட்டங்களுக்கு அது சீனாவில் இருந்தோ அல்லது பிறரிடம் இருந்தோ கடன்களை பெற வேண்டும் என்று கூறினார்.

சீனாவின் கடன்களை மறுசீரமைப்பது குறித்து அரசாங்கம் கலந்துரையாடி வருவதாகவும் பீஜிங் முன்னதாகவே நாட்டுக்கு அதிக நிதியைக் கடனாகக் கொடுக்க முன்வந்த போதும் ஏனைய கடனாளிகளும் அதே நிவாரணத்தைக் கோருவார்கள் என்ற காரணத்தாலேயே கடனைக் குறைக்க முனைந்ததாகவும்

இவ்வாறானதொரு விடயம் இலங்கையில் இதுவரை காணப்படவில்லை எனவும், அவ்வாறு நடக்குமென தாம் நினைத்திருக்கவில்லை எனவும் தெரிவித்த பிரதமர், கடினமான காலங்கள் இருந்த போதிலும் எரிபொருள் மற்றும் உணவு இன்றி இலங்கையர்கள் தவிப்பதை தாம் பார்த்ததில்லை என மேலும் தெரிவித்தார்.

## கோட்டா முறையில்...

24 மணி நேரமும் மின்சாரத்தை வழங்குவதற்காக டீசல், நப்தா மற்றும் உலை எண்ணெய் ஆகியவற்றுக்காக மாதமொன்றுக்கு100 மில்லியன் டொலர் கூடுதலாக செலவிடப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

4 மாதங்களுக்கு முன்பு 200 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த மாதாந்த எரிபொருள் செலவு தற்போது 550 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளதாகவும் எரிவாயு பற்றாக்குறையால் மின்சாரம் மற்றும் மண்ணெண்ணெய் தேவை அதிகரித்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தடையில்லா மின்சாரம் மற்றும் நிலையான எரிபொருள் விநியோகம் சீராகும் வரை, எரிபொருள் வரிசை முகாமைத்துவம் சாத்தியமற்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு வாரத்துக்கு முகாமைத்துவம் செய்யும் எரிபொருளை நிதிக் கட்டுப்பாடுகளுடன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்வதாகவும் ஆனால் சில நுகர்வோர் தங்கள் இயந்திரங்கள் மற்றும் மின்பிறப்பாக்கிகளுக்காக ஒரு மாதம் அல்லது அதற்கும் மேலான காலப்பகுதிக்கு எரிபொருளை சேகரிக்கின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## 31,725 கடவுச்சீட்டுகள் 10 நாள்களில் விநியோகம்

பத்தரமுல்லையில் உள்ள திணைக்கள அலுவலகத்துக்கு கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தரும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள காரணத்தினால், நாளாந்தம், ஒரு நாள் சேவையின் கீழ், வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

திணைக்களத்தில் வழமையான ஒரு நாள் சேவை மூலம் நாளாந்தம் 2,000 கடவுச்சீட்டுகள் வழங்கப்படும் நிலையில், இந்த எண்ணிக்கையை 3,500 ஆக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 7 மணி முதல் மதியம் 2 மணி வரையும் மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரையும் என இரண்டு கட்டங்களாக திணைக்கள ஊழியர்களை பணிக்கு அழைக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், அடுத்த வருடம் முதல் அனைத்து மாவட்ட செயலகங்கள் ஊடாகவும் கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதான மற்றும் பிராந்திய அலுவலகங்களில் கடவுச்சீட்டு வழங்குவதைப் போன்றே இத்திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்றையதினம் அரசாங்க விடுமுறையாக இருந்தாலும், குடிவரவு-குடியகல்வு திணைக்களம் திறந்திருக்குமென அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

## ஜூலைக்குள் 21ஐ நிறைவேற்ற வேண்டும்

கொழும்பில் நேற்று (12) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் இந்தத் திருத்தம் நிறைவேற்றப்படுவதை தான் விரும்பவில்லை என தெரிவித்த அவர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் சில அதிகாரங்களை பாராளுமன்றத்துக்கு மாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

உத்தேச திருத்தங்கள் எதிர்வரும் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஜூலை மாதத்துக்குள் நிறைவேற்றப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தை ஒத்திவைப்பதன் மூலம் அரசியல் ஸ்திரமின்மை மற்றும் பொருளாதார நெருக்கடி மோசமடையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### இன்று புனித அந்தோனியார் திருநாள்

## ‘கோடி அற்புதரே’ எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

இன்று காலை ஆறு மணிக்கு அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் அடிகளாரால் தமிழில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும். காலை 8.00 மணிக்கு திருவிழா திருப்பலி, மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும். மாலை 5.00 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி நடைபெறும். இரவு 8.00மணியளவில் புனித அந்தோனியாரின் திருச்சொரூப ஆசீர்வாதம் பேராயரால் வழங்கப்படும்.







பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் ஆட்சியின் போதுதான் இலங்கையில் அந்தோனியார் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது. 1597இல் கோட்டை இராச்சியத்தையும் 1618இல் யாழ்ப்பாணத்தையும் போர்த்துக்கேயர் கைப்பற்றிய பின்னர், இந்தப் பகுதிகளில் குறிப்பாக, அந்தோனியார் தேவாலயங்களைக் கட்டத் தொடங்கினார்கள். புனித அந்தோனியார் பாதுவாவில் தனது இறுதிக் காலத்தைக் கழித்திருந்தாலும் அவர் போர்த்துக்கலின் லிஸ்பன் நகரத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். எனவே, போர்த்துகேயர் கைப்பற்றிய நாடுகளில் புனித அந்தோனியார் வழிபாடு பிரசித்தம் பெற்றிருந்தது.

போர்த்துகேயரிடம் இருந்து இலங்கையை ஒல்லாந்தர் கைப்பற்றிய பின்னர், கத்தோலிக்க மதத்தை தடை செய்திருந்தார்கள். கத்தோலிக்கர்களின் பிரதான வழிபாடான அந்தோனியார் தேவாலயங்களையும் தடை செய்திருந்தார்கள். ஒல்லாந்தர்கள் (டச்சு) புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்க குருமாரது தலைகளை கண்ட இடத்தில் கொய்துவர சிப்பாய்களுக்கு அரசு உத்தரவிட்டிருந்தது. குருமார் வெளிப்படையாக திருத்தொண்டாற்ற இயலாத நிலை காணப்பட்டது. கத்தோலிக்க மக்கள் தமது பிறப்பு, திருமணம், இறப்பு போன்றவற்றுக்குக் கூட குருமார் இன்றி அவதியுற்றனர்.

இக்காலத்தில்தான், கொச்சினியிலிருந்து அந்தோணி என்ற கத்தோலிக்க குரு முன்வந்து கொழும்பை வந்தடைந்தார். துன்புறுத்தல்கள் காரணமாக அவரால் குருவானவராக செயற்பட முடியவில்லை. அதனால், வியாபாரி போல் மாறுவேடமிட்டு, பகலில் (இன்றைய மாலிபன் தெரு) கடையில் மீன் விற்றார். இரவில் அவர், கத்தோலிக்கர்களை அடையாளம் கண்டு பூசைகளை செய்தார். ஒரு வருடம் கழிந்தது.

இரகசிய கத்தோலிக்க பூசை நிகழ்வதை அறிந்த டச்சுக்காரர்கள், அந்தோணியைத் தேடினர். மீனவ சமூகத்தினர் அதிகமாக வாழ்ந்த முஹுதுபொடவத்தை (இன்றைய கொச்சிக்கடை) என்ற பகுதியை அவர், கடந்து சென்று கொண்டிருந்தார். இந்த நேரத்தில், கடல் அரிப்பு கடற்கரையை தாக்கி, மீனவர்களின் இருப்பிடங்களை சேதப்படுத்தியது.

அந்தோணியை வழியில் சந்தித்த மீனவர்கள், கடல் அரிப்பைத் தடுக்க பிரார்த்தனைகளை வழங்குமாறு கோரினார்கள். அந்தோணி அதை செய்துவிட்டால் டச்சு வீரர்களிடமிருந்து பாதுகாப்பு அளிப்பதாகவும் அவர்கள் உறுதியளித்தனர்.

பின்னர், அந்தோணி மணலில் ஒரு சிலுவையை நட்டு, மண்டியிட்டு மூன்று நாள்களாக உண்ணா நோன்பிருந்து பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, கடல் பின்வாங்கத் தொடங்கி, அரிப்பைத் தடுக்கும் மணல் அணை உருவாகியது. டச்சு வீரர்களும் இதைக் கண்டு பின்வாங்க வேண்டியிருந்தது. இந்த இடம்தான் இன்றைய கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் அமைந்திருக்கும் இடம்.

டச்சு ஆளுநர் வில்லெம் மௌரிட்ஸ் ப்ரூய்னின்க் அந்தோணியின் பிரார்த்தனையின் சக்தியை அறிந்தார். அந்த அதிசயம் நிகழ்ந்த நிலத்தை அந்தோணிக்கு வழங்கினார். தனது நன்றியை வெளிக்காட்டுமுகமாகவும் புனித அந்தோணியாருக்கு அர்ப்பணிக்கும் முகமாகவும், சிலுவையை நாட்டிய இடத்தில் சிறிய தேவாலயத்தை அமைத்தார் அந்தோணி. அந்த சிலுவை நட்டிய இடத்தில் தான், பலர் வரிசையாக சென்று வழிபடும் ‘புதுமைச் சுருவம்’ வைக்கப்பட்டிருக்கிறது.

அந்தோணி முதலில் அந்த நிலத்தில் ஒரு சிறு கடையை ஆரம்பித்தார். கொச்சியில் இருந்து வந்தவரின் கடை என்பதால், ‘கொச்சியாகே கடே’ காலப்போக்கில் ‘கொச்சிக்கடை’ என்று நிலை பெற்றது.

இந்த நிலம் அதிகாரப்பூர்வமாக டச்சு கிழக்கிந்திய கம்பனியால் ஜனவரி 20, 1790 அன்று, பத்திரம் இல 31 இன் மூலம் தேவாலயத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அந்தோணி இறந்தபோது, அவரின் உடலும் இந்தத் தேவாலயத்தில் தான் அடக்கம் செய்யப்பட்டது.

தற்போது தேவாலயத்தில் மீண்டும் வைக்கப்பட்டுள்ள புனித அந்தோனியாரின் புனிதச் சிலை, 1822 ஆம் ஆண்டு கோவாவில் இருந்து கொண்டு வரப்பட்டதாகும். 1806 ஆம் ஆண்டு அடித்தளம் இடப்பட்டு, 1834ஆம் ஆண்டு புதிய தேவாலயம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. அந்த ஆண்டைத்தான் ஆலயத்தின் தொடக்க நாளாக இன்றுவரை கணிக்கப்பட்டுவருகிறது. 1934இல் நூற்றாண்டு கொண்டாடப்பட்டது. 1938 ஆம் ஆண்டு பெரிய ஆலயமாக பெருப்பிக்கப்பட்டது. பாதுவா நகரிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித அந்தோனியாரின் நாக்கின் ஒரு சிறிய பகுதி இங்கே விசேடமாக வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

கொழும்பில் அதிகளவிலானோர் கலந்து கொள்ளும் கிறிஸ்தவ திருவிழா அந்தோனியார் திருவிழா தான். பல தடவைகள் சன நெருக்கடியால் விபத்துக்கள் நேர்ந்திருக்கின்றன. அந்தளவுக்கு கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை ஜிந்துப்பிட்டி, விவேகானந்தா மேடு, செட்டியார் தெரு என தேவாலயத்தின் சுற்றுவட்டாரப் பகுதியெங்கும் திருவிழாக்கோலம் பூண்டு, எங்கெங்கும் விளக்கொளியில் கொண்டாட்டமாகக் காட்சித் தரும். இந்து, பௌத்த, முஸ்லிம் மக்களும் கூட ஒன்றாக கூடிக் கொண்டாடும் நிகழ்வு இது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி மோசமான பயங்கரவாத தற்கொலைத் தாக்குதலுக்கு அந்தோனியார் ஆலயமும் இலக்கானது. 93 பேர் இங்கே கொல்லப்பட்டார்கள். பல நூற்றுகணக்கானோர் படுகாயமுற்றார்கள். பலத்த சேதத்துக்கு உள்ளான தேவாலயம் ஜூன் 12 ஆம் திகதி தான் மீண்டும் திறக்கப்பட்டது. அந்தோனியார் தேவாலயத்தின் வரலாற்றைக் கூறும் சிறு நூதனசாலை 2013 ஜனவரி 13 அன்றிலிருந்து இயங்கி வருகிறது. இங்கே வரலாற்று விவரங்களை அறிந்துகொள்ளலாம்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்துக்கு கத்தோலிக்கர்கள் மட்டுமன்றி இந்துக்களும் பௌத்தர்களும் ஏனைய மதத்தினரும், செவ்வாய்க்கிழமைகளில் மெழுகுதிரிகளோடு வருவார்கள். அந்தளவு அந்தோனியார் மீது அனைத்து சமூக மக்களும் நம்பிக்கை வைத்துள்ளார்கள்.

‘கோடி அற்புதர்’ எனக் கொண்டாடப்படும் புனித அந்தோனியார், ‘பதுவை பதியர்’, ‘பசாசுகளை நடு நடுங்கச் செய்பவர்’, ‘காணாமல் போனவைகளை கண்டுபிடித்துக் கொடுப்பவர்’ போன்ற அடைமொழிகளுக்கும் சொந்தக்காரர் ஆவார்.

புனித அந்தோனியார் போத்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில், 1195 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி பிறந்தார். அவரது பெற்றோர்கள் மார்ட்டின், மேரி; இவர்களுக்கு முன்றாவதாகப் பிறந்த குழந்தைக்கு பெர்னாந்து என்று பெயரிட்டனர்.

கூரிய நுண்ணறிவு படைத்த பெர்னாந்து, கல்வியில் சிறந்து விளங்கினார். கொயிம்ரா என்னும் இடத்துக்குச் சென்று குருத்துவக் கல்வி பயின்று, 1219ஆம் ஆண்டில் 24 ஆம் வயதில் குருப்பட்டம் பெற்றார்.

1221ஆம் ஆண்டு புனித அகுஸ்தீன் சபையை விட்டு விலகி, பிரன்சீஸ்கன் சபையில் சேர்ந்தார். அப்போதுதான் பெர்னாந்து என்ற பெயரை மாற்றி, அந்தோனி என்ற புதுப் பெயர் எடுத்துக்கொண்டார்.

தாம் வாழ்ந்த காலத்திலும் இறப்பிற்குப் பின்னும் கடவுள் அளித்த கொடையால் அனேக புதுமைகள் செய்தார். அந்தோனியார், குழந்தை இயேசுவை காட்சியில் கண்டு, கையில் ஏந்தியதாகவும் கூறுவர். ஆகவேதான், படங்களில் அவரது கையில் குழந்தைஇயேசுவும் மற்றொரு கையில் வேதாகமமும் வைத்திருப்பதாக காட்டப்படுகிறது. காணமல் போன பொருட்களை, புனித அந்தோனியாரை நினைத்து மன்றாடினால் கிடைக்கிறது என்ற விசுவாசம் இன்றும் மக்களிடம் காணப்படுகிறது.

1231ஆம் ஆண்டு பல ஊர்களில் மறையுரை ஆற்றியதாலும், கடும் தவ முயற்சிகளாலும் நோய்வாய் பட்டார். அதே ஆண்டில் ஜுன் மாதம் 13 நாள் இறுதி திருவருட்சாதனங்களைப் பெற்றபின் இறைவனில் இளைப்பாறினார். அப்போது அவருக்கு வயது 36.

அதன் பின்னர், 336 ஆண்டுகளுக்குப்பின்னர் அவருடைய கல்லறை தோண்டப்பட்டு, அவருடைய நாக்கு மட்டும் அழியாமல் இருப்பது கண்டுபிக்கப்பட்டது. அந்த நாக்கு இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அமலகுமார்



### கந்தபளை காணி விவகாரம்

# 15அன்று இ.தொ.கா இறுதி விசாரணை

கந்தபளை காணி பிரச்சினை குறித்து, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முழுமையான ஆய்வில் ஈடுபட்டுவருகிறது என்றும் எதிர்வரும் 15ஆம் திகதி சௌமியபவாணில் இறுதி விசாரணை இடம்பெறும் என்றும் காங்கிரஸின் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நுவரெலியா பிரதேச சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட கந்தபளை, கொங்கோடியா தோட்டத்தின் 80 பேர்ச் (0.2ஹெக்டேயர்கள்) காணி நுவரெலியா பிரதேச சபைக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்தது. அக்காணி சபை தலைவரால் முறைகேடு செய்யப்பட்டுள்ளதாக சர்ச்சைகள் எழுந்துள்ளது.

இது தொடர்பில் இ.தொ.கா வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

கந்தபளை காணி பிரச்சினை கடந்த மாதம் 31 ஆம் திகதி ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து அதே தினத்தில் இப்பிரச்சினை தொடர்பாக இ.தொ.காவினால் பாரபட்சம் இன்றி உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என ஊடக அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

மேலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜூன் 8ஆம் திகதி அன்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் இக்குற்றம் உறுதிப்படுத்தப்படும்சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்மென தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இப்பிரச்சினை தொடர்பான அரச துறையினரிடம் சம்பந்தப்பட்ட ஆவணங்களை உறுதிப்படுத்தப்படுத்துவதற்கான வேலைகளை இ.தொ.கா முன்னெடுத்துவருகிறது.

வேலுயோகராஜா மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு இ.தொ.கா நடவடிக்கை எடுக்கவில்லை மௌனம் காத்து வருகின்றது என அச்சு ஊடகங்கள் ஊடாக வெளியிடப்பட்டுள்ள செய்திகள் முற்றிலும் ஏற்புடையதல்ல.

இக்குற்றச்சாட்டு தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இ.தொ.கா தலைமை காரியாலயத்தில் அனைத்து தரப்பினராலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் முழுமையாக ஆராயப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 15ம் திகதி கந்தப்பளை காணி பிரச்சினை தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு உண்மைத் தன்மையின் பிரதகாரம் பாரபட்சம் இன்றி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இ.தொ.கா இக்குற்றச்சாட்டுடன் சம்பந்தப்படவர்களை பாதுகாப்பதற்கோ, ஆதரவளிப்பதற்கோ என்றும் துணை போகாது.

மேலும் கடந்த சில நாட்களாக வேலு யோகராஜாவின் மோசமான வார்த்தைகளை கொண்ட குரல் பதிவொன்று சமூக வலையத்தளங்கள் வெளியாக பகிரப்பட்டு வந்துள்ளது. குறித்த குரல் பதிவில் மிக மோசமான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

இது தொடர்பில் வேலு யோகராஜா ஜூன் அன்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் அவர் இது ஒரு மிமிக்கிறி செய்யப்பட்ட குரல் பதிவு என தெரிவித்திருந்தார்.

இக்குரல் பதிவு தொடர்பாக சம்பந்தப்படவர்களிடம் இ.தொ.கா, வேலு யோகராஜாவின் தொலைபேசியில் இருந்து அழைப்பு வந்ததற்கான screen shot, குரல் பதிவு மற்றும் தொலைப்பேசி கட்டண சீட்டு ஆதாரங்களை கோரியுள்ளது. இது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் இது தொடர்பாகவும் அவர் மீது இ.தொ.கா கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள உள்ளது என இதொ.காவின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## தம்மிக்க எம்.பியின்

வீட்டின் முன் ஆர்ப்பாட்டம்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவின் இல்லத்துக்கு முன்பாக ஒருசிலர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நேற்று (12) ஈடுபட்டிருந்தனர்.

அவர், அரசியலுக்கு வருகைதந்ததை எதிர்த்தே அவரது கொழும்பு இல்லத்தின் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, தனது தேசியப் பட்டியல் எம்.பி பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே வர்த்தகர் தம்மிக்க பெரேரா நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### உணவு நெருக்கடிக்கு முகம் கொடுக்கவே

## இராணுவத்தினர் பயிரிட்டனர்

சேஹ்ன் செனவிரத்ன

நாட்டு மக்கள் அனர்த்தம் ஒன்றுக்கு முகம்கொடுக்கும் போது, இராணுவத்தினர் எப்போதும் முன்னின்று செயற்படுவதைப் போன்றே, தற்போது மக்கள் எதிர்கொண்டுள்ள உணவ பிரச்சினைக்குத் தீர்வாக உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என இராணுவத் தளபதி லெபடினன் ஜெனரல் விகும் லியனகே தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 24ஆவது இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் நேற்று முன்தினம் (11) கண்டி - ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் மேற்கொண்ட போதே, ஊடகங்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.தொடர்ந்து தெரிவித்த அவர்,அரசாங்கத்தால் கைவிடப்பட்டுள்ள சகல இடங்கள் தொடர்பிலும் ஆராய்ந்து, உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கு இராணுவத்தினர் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.



அந்த செயற்பாடுகளை ஒருங்கமைத்து கொண்டு செல்ல தனியான இராணுவ பணியாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றார்.

எதிர்காலத்தில் முகங்கொடுக்கவுள்ள உணவு நெருக்கடியை வெற்றிகரமாக எதிர்கொள்ள சகல மக்களும் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாகவும் நாடு இக்கட்டான நிலையில் இருக்கும் போது மக்களை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபட இராணுவத்தினருக்கு முன்னுரிமையளித்து, அவரிகளிடம் பாரிய கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றார்.

## ஜெனிவா செல்லும் ஆளுங்கட்சி எம்.பிக்கள்

மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் வீடுகள் கொளுத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர், ஜெனிவாவில் முறைப்பாடு செய்ய தயாராகி வருகிறார்கள்.

‘கோட்டா கோ கம”வை முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் தாக்கினார்கள். இதனை தொடர்ந்து நாடெங்கிலும் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களால் 80இக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வீடுகள் கொளுத்தப்பட்டு, சொத்துகளுக்கும் சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இந்த வன்முறைச் சம்பவங்களால் தங்களது வீடுகள் பாதிக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில், தங்களுக்கு நீதி கிடைக்கும் என்கிற நம்பிக்கை தமக்கு இல்லை என முன்னாள் அமைச்சர் பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

எனவே இச்சம்பவம் தொடர்பில் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம் சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றில் பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் முறைப்பாடு செய்ய உள்ளதாகவும் தெரிவித்தார்.

## 173 கைதிகள் விடுதலை

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாளைய தினம் (12) சிறைக் கைதிகள் 173 பேரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவினால் கைதிகளை விடுவிக்குமாறு மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைக்கு அமைய கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

அபராதம் செலுத்தத் தவறியதால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 141 கைதிகளுக்கு அரசின் பொது மன்னிப்பின் கீழ் செலுத்த வேண்டிய அபராதங்கள் தள்ளுபடி செய்யப்படும் என்றும் 14 நாட்கள் குறைவதன் காரணத்தால் மேலும் 32 கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர்.

அதிகபட்சமாக 23 கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்படவுள்ளனர் என்றும் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், குருவிட்ட, மஹர, நீர்கொழும்பு, வீரவில, வாரியபொல, போகம்பர, அநுராதபுரம், களுத்துறை, கொழும்பு மகசின் சிறைச்சாலை, அங்குனகொலபெலஸ்ஸ, பொலன்னறுவை, கேகாலை, மட்டக்களப்பு, மொனராகலை உள்ளிட்ட பல சிறைச்சாலைகளில் இருந்து. கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர் என்று அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நிறுவனத்தின் பெயர் மாற்றம் குறித்த பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (2) கீழ் கீழ்க்கானும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு 2022 மே மாதம் 26 ஆம் திகதியில் இருந்து பெயர் மாற்றம் செய்யப்பட்டு நடைமுறைக்கு வருகிறது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

**கம்பனியின் பழைய பெயர் :** அக்ஸிவெர்ஸ் ஸ்டூடியோ (பீவீட) எல்டீடி

**கம்பனியின் புதிய பெயர் :** நைன் ஹர்மிட்ஸ் (பீவீட) எல்டீடி

**கம்பனியின் இலக்கம் :** P - V 00256588

**பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :** அலகு 2206, வன் கோல் வேஸ், சங்கிரிலா அலுவலகம், கொழும்பு 02.

**கம்பனி செயலாளர்கள்**
**கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ் (பீவீட) எல்டீடி**

எரிபொருள் நெருக்கடியை தீர்க்க

# அரபு தேசம் உதவும்

## சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் நம்பிக்கை

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில், இருதரப்பும் அடைந்துகொள்ளக் கூடிய அனுகூலங்கள் குறித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அமைச்சருக்கும் ஐக்கிய அரபு இராச்சியத் தூதுவர் காலித் நாஸர் சுலைமான் அல் அமரிக்கும்டை இடையில் கடந்த வெள்ளிக்கிழமை (10) நடந்த சந்திப்பிலே, இதுபற்றிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அந்தச்சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவிக்கையில், சுற்றாடல் துறையின் மேம்பாடுகளால், அடையக்கூடிய உச்சபட்ச ஆதாயங்களை அடையாளங்காணல், அவற்றை அமல்படுத்துவதில் இரு நாடுகளும் ஒத்துழைத்துச் செயற்படல்,



இலங்கை எதிர்கொண்டுள்ள எரிபொருள் நெருக்கடியை தீர்க்க முறையான உதவிகள், ஆலோசனைகளை ஐக்கிய அரபு இராச்சியம் வழங்குதல் பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் இச்சந்திப்பில், ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள தொழில்வாய்ப்புகளில் இலங்கையரை உள்வாங்குவது பற்றி கவனம் செலுத்துமாறு ஐக்கிய அரபு இராச்சியத்தூதர், அமைச்சர் நஸீர் அஹமட்டைக் கேட்டுக்கொண்டார்.

அதேபோல, இலங்கையில் முதலிடுவதற்கான சாத்தியங்களை அதிகப்படுத்துமாறும் தூதுவரிடம் அமைச்சர் நஸீர் அஹமட் கேட்டுக்கொண்டார்.

## யானைகள் துவம்சம்



தீஷான் அஹமட்

திருகோணமலை, சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள, லிங்கபுரம் கிராமத்திற்குள் ஞாயிற்றுக்கிழமை (12) அதிகாலை காட்டு யானைகள் உட்புகுந்து சேதம் விளைவித்துள்ளன.

இதன்போது இரண்டு வீடுகளை சேதப்படுத்தியுள்ளன. அத்தோடு வீட்டிலிருந்து உபகரணங்கள் பயன்தரும் வாழை மரங்கள், கரும்பு போன்றவற்றையும் துவம்சம் செய்துள்ளன. வீட்டிலிருந்தவர்கள் யானைகளிடமிருந்து தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

## முதன்மை மாணவி கௌரவிப்பு



எச்.எம்.எம்.பர்ஸான்

ஓட்டமாவடியில் இயங்கி வரும் மத்ரஸது ஸைத் பின் தாபித் கலாசாலையில் முழு குர்ஆனையும் மனனம் செய்த மாணவியை கௌரவிக்கும் நிகழ்வு, கலாசாலையின் அதிபர் அல் ஹாபிழ் ஏ.எல். நிஜாம்தீன் தலைமையில், மீராவோடை அந்நூர் கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (11) நடைபெற்றது.

குர்ஆனை முழுமையாக மனனம் செய்த முதலாவது மாணவியான எம்.எச்.சதூகா ஸைய்னப் பரிசில்கள் மற்றும் சினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர், இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஏ.எம். ஹனீபா, ஆசிரியை எம்.எஸ். எஸ். இனாயா தம்பதிகளின் புதல்வியாவார்.

## ஊடக டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



பாறுக் ஷிஹான்

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 2017/18 ஆம் ஆண்டிற்கான இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை(12) காலை 9 மணிக்கு பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தகைசார் பேராசிரியர் கலாநிதி ஏ. சண்முகதாஸ் Zoom தொழில்நுட்பத்தின் ஊடாகக் கலந்து கொண்டு பிரதான உரை நிகழ்த்தினார்.

2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த பயிற்சிநெறியானது, ஈஸ்டர் குண்டுத்தாக்குதல், கொரோனா நோய்த் தொற்று காரணமாக சில வருடங்கள் காலதாமதமானதுடன், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடந்த வருடம் இதற்கான இறுதிப் பரீட்சை இடம்பெற்றிருந்தது.

இதில் 41 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், இரு மாணவர்கள் அதிவிஷேட சித்திகளைப் பெற்றிருந்தனர்.

## நிவாரணப் பொதிகள் வழங்கி வைப்பு





சகா

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக வறுமையில் வாழும் மக்களுக்காக, தமிழ்நாட்டு மக்களின் பங்களிப்பில் நிவாரணப் பொதியாக அரிசிப்பொதிகள் மற்றும் பால்மா பொதிகளும் வழங்கும் நிகழ்வு நாடுபூராக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகை யில், திருக்கோவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில், உதவிப்பிரதேச செயலாளர் க.சதிசேகரனின் ஒழுங்குபடுத்தலின் கீழ் திருக்கோவில் பிரதேசத்தில் 2,150 நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

மேலும், இப்பொதிகள் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு, பொருளாதார அபிவிருத்தி உத்தியோத்தர்கள், சமுர்த்தி உத்தியோத்தர்கள் ஊடாக வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன், உதவிச்செயலாளர் க.சதிசேகரன், சமுர்த்தி தலைமையக முகாமையாளர், கே.பரமானந்தம், பிரதேச செயலக நிர்வாக உதியோத்தர் எஸ்.மோகனராஜா, சமுர்த்தி சமுகச்சூழல் பாதுகாப்பு உத்தியோத்தர் எஸ்.பி.சீலன், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர் தமிழர்கள் முதலிட்டால்

# புலி முத்திரை குத்திவிடுவர்

க. அகரன்

புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலிட்டால் அவற்றை இந்த அரசு முடக்குமெனத் தெரிவித்துள்ள வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அவ்வாறு முதலிட்டவர்களை விடுதலைப்புலிகளை அமைப்பைச் சேர்ந்தவர்களென இந்த அரசாங்கம் முத்திரைக்குத்தும் என்றார்.



வவுனியாவில் அமைந்துள்ள டெலோ கட்சி அலுவலகத்தில் நேற்று (12) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்த சட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தேசியத்தின்பால் செயற்படுகின்ற கட்சிகளின் தலைவர்களை கூட்டி, இரண்டு மூன்று தினங்களாக தமிழ் தேசிய கூட்டமைப்பு விவாதித்து வருகின்றது.

இந்த விவகாரம் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொண்ணம்பலத்துடனும் பேச இருக்கின்றோம்.

21 ஆவது திருத்த சட்டத்தில் எமது மக்களின் கோரிக்கைகளை தமிழ் பேசும் மக்களுடைய ஒட்டு மொத்த குரலாக, எவ்வாறு உள்ளடக்குவது என்பதுடன் இந்தத் திருத்தச்சட்டத்தில் ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் முற்றாக ஒழிக்கப்படவில்லை.

ஜனாதிபதி வீட்டுக்கு செல்ல வேண்டும், ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்பதே மக்களுடைய தற்போதைய கோரிக்கையாகும். ஆனால், இந்த விடயத்தில் 19 ஆவது திருத்தச்சட்டத்தை கூடுதலாக பார்க்கலாம் என்ற எண்ணமும் ஏற்பட்டுள்ளது என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில், "ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் ஆகியவுடன் புலம்பெயர் தமிழர்களுடைய உதவியை கோரியிருந்தார். தற்போது சில புலம்பெயர் அமைப்புகளும் நிபந்தனையுடன் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்" என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், "இன்றைய சூழலிலே புலம்பெயர் உறவுகளிடம் பணம் கோருவது, சந்தர்ப்பத்திற்காக அவர்களினை பயன்படுத்துவது போன்று தெரிகின்றது. புலம்பெயர் நாடுகளிலுள்ள எங்களுடைய பல அமைப்புகள் மீது ஏற்கெனவே தடைவிதிக்கப்பட்டுள்ளது. இத்தடையானது இலங்கை அரசினால் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

அத்துடன் மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை வழங்குவதுடன் அதற்குரிய நிதி அதிகாரத்தினை, மாகாண முதலமைச்சர் நிதியைக் கையாளக்கூடிய வசதியை பிரதமர் செய்வதன் மூலமாக இந்நாட்டினுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

தற்போதும் பயங்கரவாத தடைச்சட்டம் அமலில் இருக்கிறது. இச்சட்டம் நீக்கப்பட வேண்டும். இவ்வாறான நிலையில் புலம்பெயர் உறவுகள் தங்களுடைய முதலீடுகளை செய்த பின்னர், அரசாங்கம் திட்டமிட்டு விடுதலைப்புலிகளுடன் தொடர்பு இருப்பதாக தெரிவித்து அவர்களுடைய முதலீடுகளை முடக்குகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன என்றார்.



## யாழில் விசேட சுற்றிவளைப்பு

எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பிரதேசத்தில் 30 இற்கு மேற்பட்ட வியாபார நிறுவனங்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதில், அரிசியை கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த 5 விற்பனை நிலையங்களுக்கு எதிராகவும், நூடில்ஸ் மற்றும் பிஸ்கட் வகைகளை அதிக விலைக்கு விற்பனை செய்த 2 விற்பனை நிலையங்களுக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தொடர்ச்சியாக வியாபார நிலையங்களில் பரிசோதனை, கண்காணிப்பு நடவடிக்கைகள் நடைபெறுமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.



## வாளால் வெட்டி நகைகள் கொள்ளை

எம்.றொசாந்த்

வீடொன்றுக்குள் வாள்களுடன் நேற்று (12) அதிகாலை, நுழைந்த முகமூடி கொள்ளைக் கும்பல், வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டு விட்டு, நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளது.

கொள்ளையர்களின் தாக்குதலுக்கு இலக்கான இரண்டு ஆண்கள், பெண்ணொருவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வீட்டில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் பூப்புனித நீராட்டு விழா நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் நேற்று (12) அதிகாலை வேளை முகங்களை மறைத்தவாறு, வாள்களுடன் வீட்டை உடைத்து உள்நுழைந்த கொள்ளை கும்பல், வீட்டில் இருந்தவர்கள் மீது வாள் வெட்டினை மேற்கொண்டு, ஏனையவர்களை வாள் முனையில் அச்சுறுத்தி, வீட்டில் இருந்தவர்கள் அணிந்திருந்த 10 பவுண் நகைகளைக் கொள்ளையடித்து தப்பி சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தங்களுக்கு முறைப்பாடு கிடைத்துள்ள பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்ததுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## 2 சகோதரர்கள் படுகொலை; 16 பேர் தலைமறைவு




றொசேரியன் லெம்பட்

மன்னார், நொச்சிக்குளம் பகுதியில் சகோதரர்கள் இருவர் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 16 சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்கள் அனைவரும் தலைமறைவாகியுள்ளனர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட இருவரின் சடலங்கள் சனிக்கிழமை (11) காலை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தகராறு, வலுப் பெற்றதையடுத்து, வெள்ளிக்கிழமை காலைவேளையில், இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

## கத்திக் குத்தில் இருவர் படுகாயம்

பொன்னாலையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில், படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் பொன்னாலைஸ்யை சேர்ந்த 57 மற்றும் 41 வயதான இருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# 60 லீற்றர் டீசலுடன் பெண் கைது

ராமு தனராஜா

லுணுகலை, ஹொப்டன் பகுதியில் 60 லீற்றர் டீசலை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில், 33 வயதுடைய பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து, பதுளை பிராந்திய குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் தலைமை அதிகாரி சாமிந்த தலைமையிலான குழுவினர் டீசல் வைக்கப்பட்டுள்ளதாக சந்தேகப்படும் இடத்தில் நேற்றுமுன்தினம் (11) தேடுதலை மேற்கொண்ட போது, டீசல் நிரப்பப்பட்ட மூன்று கேன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.



கைது செய்யப்பட்ட சந்தேகநபர், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு, பசறை நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பசுக்களுக்கு பலாக்காய் தடை

ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா மாவட்டத்தில் தனியார் மற்றும் அரச காணிகளில் உள்ள பலாக்காய்களை பறித்து, வட்டவளை பிரதேசத்திலுள்ள தனியார் விலங்குப் பண்ணையிலுள்ள கால்நடைகளுக்கு உணவாக வழங்கும் திட்டத்தை இடைநிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

குறித்த பண்ணையில் அதிகளவான பசுக்கள் காணப்படுவதுடன், அவற்றுக்குத்த் தேவையான புற்கள், சோளம், பிண்ணாக்கு என்பவற்றின் விலை அதிகரிப்பால், குறித்த பண்ணையின் நிர்வாக அதிகாரி, பலாக்காய்களை கொள்வனவு செய்து அவற்றை சிறிய துண்டுகளாக்கி பண்ணையிலுள்ள பசுக்களுக்கு வழங்குவதாக வட்டவளை பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.



உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ், நுவரெலியா மாவட்டத்தில் பலா மரங்களை தறிப்பது தடைசெய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், குறித்த பண்ணைக்காக அதிகளவு பலாக்காய்களை பறிக்கப்படுவதாகவும் இதற்காக மாவட்டம் முழுவதும் பல வாகனங்களைப் பயன்படுத்தி, பலாக்காய்கள் பறிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகள் குறித்து கினிகத்தேனை பிரதேச செயலகப் பிரிவுள்ள பல கிராம மக்களை தெளிவுபடுத்தியதை அடுத்து, பலாகாய்களை பறிக்க வாகனங்களில் வருகை தந்தவர்கள் கிராமவாசிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மேலதிக வருமானங்களை தினமும் பெற்றுக்கொள்வதற்காக குறித்த பண்ணையில் தொழில் புரியும் பலர், நுவரெலியா மாவட்டத்துக்குள் மாத்திரம் அல்லாது ஏனைய பிரதேசங்களுக்கும் சென்று பலாக்காய்களை குறைந்த விலையில் பெற்று பண்ணைக்கு கொண்டு செல்வதாகவும் வட்டவளை பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# மரத்திலிருந்து வழுக்கி விழுந்து சிறுவன் மரணம்

செ.தி பெருமாள், எஸ்.கணேசன்

மஸ்கெலியா, ப்ரௌன்லோ வனப்பகுதிக்கு தனது சகோதரனுடன் நேற்று (12) காலை வேளையில் விறகு சேகரிக்கச் சென்ற பாடசாலை மாணவன், மரத்திலிருந்து வழுக்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

மரத்திலிருந்து தவறி விழுந்த குறித்த சிறுவன், ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சம்பவத்தில், மஸ்கெலியா சமனெலிய சிங்கள மகா வித்தியாலயத்தில் தரம் 8 இல் கல்வி பயிலும், மஸ்கெலியா ப்ரௌன்லோ தோட்டத்தைச் சேர்ந்த 14 வயதுடைய எஸ்.ஜே.ரஜிந்த துல்சான் குணசேகர என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் சடலம் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையிலிருந்து, டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# பதுளை, ரொக்கில் சந்தனக் காப்பு சாத்தும் நிகழ்வு



அருள்மிகு ஸ்ரீ முருகப் பெருமான் தேவஸ்தான சந்தனக் காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று (12) நடைபெற்றது. தேவஸ்தான தலைவர் க. ஜெயநாயகம், காளாஞ்சி பெறுவதையும், மூலஸ்தான முருகப் பெருமானையும், கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கும் படங்களில் காணலாம்.
(எம். செல்வராஜா)

# பஸ்ஸிலில் கையை வைத்த தனியார் நடத்துநர் கைது




ராமு தனராஜா

பசறையிலிருந்து மாத்தறைக்கு சேவையில் ஈடுபடும், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸிலிருந்து டீசலை திருட முயன்ற நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பசறை பஸ் தரிப்பிடத்தில் நேற்று (12) காலை 6.30 மணிக்கு மாத்தறைக்கு செல்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸிலேயே நேற்று முன்தினம் (11) இரவு இத்திருட்டு சம்பவம் பதிவாகியுள்ளது.

பதுளை- பசறை இடையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்றின் நடத்துநரே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

35 வயதுடைய சந்தேக நபரான நடத்துநர், பசறை தினம் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வரும்போது வாருங்கள்

மலைவாஞ்ஞன்

ஹட்டன், மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக உள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினமும் (11) மண்ணெண்ணெய்காக காத்திருந்த மக்கள் ஏமாற்றத்துடனேயே வீடு திரும்பினர்.

மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக, அதிகாலை நான்கு மணி முதல் நீண்ட வரிசையில் நின்ற மக்களிடம், பொலிஸார் மண்ணெண்ணெய் இன்று விநியோகிக்கப்பட மாட்டாது எனத் தெரிவித்ததையடுத்து பொது மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இது குறித்த மண்ணெண்ணெய் விநியோக முகவரிடம் கேட்ட போது, மண்ணெண்ணெய் எப்போது வரும் என்று எங்களுக்கு முன்கூட்டி அறிவிப்பதில்லை. வரும்பொழுதுதான் எங்களுக்கு அறிவிக்கிறார்கள். அதனால் எங்களுக்கு உரிய நாளில் வாருங்கள் என்று மக்களுக்கு தெரிவிக்க முடியாது என்றார்.

## 6 மாதங்களின் பின்னர்

# மலையகத்துக்கு மஞ்சள் சிலிண்டர்

ரஞ்சித் ராஜபக்ஷ

ஆறு மாதங்களின் பின்னர் நுவரெலிய மாவட்டத்திலுள்ள பிரதான நகரங்களில் லாஃப்ஸ் சமையல் எரிவாயு விநியோகம் நேற்று (12) முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைய ஹட்டன், கொட்டகலை, தலவாக்கலை, டயகம, அக்கரப்பத்தனை, லிந்துலை, நானுஓயா ஆகிய நகரங்களில் லாஃப்ஸ் சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டது.



இராணுவம், பொலிஸாரின் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் சிலிண்டர் விநியோகம் முன்னெடுக்கப்பட்டதுடன், சுற்றுலா விடுதிகள், ஹோட்டல்கள் என்பவற்றுக்கு 37.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டது.

## பிள்ளைகளுக்கு பட்டினியில்

# வேதனையடைந்த தாய்

எம்.செல்வராஜா

உணவு வழங்க வழியில்லாததால், தனது பிள்ளைகள் மூன்று நாட்களாக பட்டினியில் வாடுவதை கண்டு, அதனை சகித்துக்கொள்ள முடியாத, தாயொருவர் தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முயற்சித்த சம்பவமொன்று வெல்லவாய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அந்த தாய், தற்போது பதுளை வைத்தியசாலையில், தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

4, 8 மற்றும் 9 வயதுகளில் இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளதுடன், கணவனுக்கு நிரந்தர தொழில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 நாட்களாக நீரை மட்டுமே அருந்தி இவர்கள் உயிர்வாழ்ந்துள்ளனர்.

இந்நிலையில், பிள்ளைகள் பட்டினியில் தவிப்பதை, தாங்கிக்கொள்ள முடியாத தாய், தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முயன்றுள்ளதாகவும் அவரை காப்பாற்றுவதற்காக வைத்தியர்கள் தற்போது போராடிக்கொண்டிருப்பதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

## அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு

# அதிகாரிகள் எதிரா?

## இராதா எம்.பி கேள்வி

டி.ஷங்கீதன்

பெருந்தோட்ட பகுதிகளில் விவசாயம் செய்கின்ற காணிகளை தோட்ட நிர்வாகத்திடம் கையளிக்குமாறு, பெருந்தோட்ட அமைச்சின் பெருந்தோட்ட முகாமைத்துவ பணிப்பாளர் பிரிவின் அதிகாரி ஒருவர், கடிதம் மூலம் அறிவித்தல் விடுத்துள்ளார் என மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று (12) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கம் தரிசு நிலங்களை விவசாயத்திற்கு பயன்படுத்துமாறு அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது. இதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் ஆகியோருக்கு பணிப்புரை விடுத்துள்ள நிலையில், ஒரு சில அதிகாரிகள் கொழும்பில் ஏ.சி அறைகளில் இருந்து கொண்டு, சரியான தவல்களை பெற்றுக் கொள்ளாமல், பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவிப்பது என்பது அரசாங்கத்தின் கொள்கைக்கு மாறாக அதிகாரிகள் செயற்படுகின்றார்களா என்ற கேள்வி எமக்கு எழுகின்றது.

சில நாள்களுக்கு முன்பு ஹட்டன், வெலிஓயா தோட்டத்தில் விவசாயம் செய்துவருகின்ற வேலு இராமச்சந்திரன் என்பவருடைய காணியை தோட்ட நிர்வாகத்திடம் கையளிக்குமாறு, பெருந்தோட்ட அமைச்சின் பெருந்தோட்ட முகாமைத்துவ பணிப்பாளர் பிரிவின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி, காணி சட்டவிதிகளுக்கு முரணாக காணியை தன்வசம் வைத்திருப்பதாகவும் இது காணி சட்ட விதிகளுக்கு முரணானது எனவும் எனவே எதிர்வரும் 05.07.2022 திகதிக்கு முன்பு காணியை தோட்ட நிர்வாகத்திடம் கையளிக்குமாறும் கடிதம் மூலம் அறிவித்தல் விடுத்திருந்தார்.

பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதம் தொடர்பில் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து, நான் எந்தக் காரணம் கொண்டும் காணியை தோட்ட நிர்வாகத்திடம் கையளிக்க வேண்டாம் எனத் தெரிவித்துள்ளேன்.

எனவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உடனடியாக இந்தக் கடிதம் அனுப்புகின்ற விடயத்தை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் அவர்கள் பின்றபற்ற வேண்டிய நடைமுறை தொடர்பாகவும் உரிய அறிவுறுத்தல் வழங்க வேண்டும் எனவும் நாம் கோரிக்கை ஒன்றையும் முன்வைக்கின்றோம் என்றார்.



# சிறுவர் விடயங்களில் பெற்றோர் விழிப்பாகவே இருங்கள்

கொரோனா காலத்துடன் ஒப்பிடும்போது, சிறுவர்களுக்கு எதிரான வீட்டு வன்முறைகள், வன்கொடுமைகள், வீடுகளில் வேலைக்கு அமர்த்தல், விபத்துகளில் சிக்குதல், தீய பழக்கங்களுக்கு அடிமையாதல், பாலியல் வன்கொடுமைகள் என்பன தற்போது அதிகரித்துள்ளன.

இந்த நெருக்கடியான காலக்கட்டத்தில், சிறுவர்களுக்கு போதியளவான போஷாக்கான உணவு கிடைக்காமையால், புரத குறைப்பாடு அதிகரிக்கிறது. இவற்றுக்கு மத்தியில் அவர்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

தன்னுடைய மூன்று பிள்ளைகளுக்கும் மூன்று நாள்களாக உணவு கொடுக்க முடியாத தாயொருவர், வெறும் தண்ணீரை மட்டுமே பருகக்கொடுத்து உயிர்மூச்சு கொடுத்திருந்தார். தன்னுடைய பிள்ளைகள் படும் வேதனையை கண்டு மனமுடைந்துபோன அந்தத் தாய், தன்னுயிரை மாய்த்துக்கொள்வதற்கு முயன்று, இறுதியில் உயிருக்காக ஊசலாடிக்கொண்டிருக்கின்றார்.

பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து, சவால்களை எதிர்கொண்டு எதிர்நீச்சல் போடுவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் சிறுசிறு தோல்விகளிலும் கூட, விபரீதமான முடிவுகளை எட்டும் எண்ணம் வளர்ந்துவிடும். அதனால்தான், சிறுவர்கள் வெற்றிபெறும்போது வாழ்த்தவும் தோல்வியடையும் போது தட்டிக்கொடுக்கவும் பழகிக்கொள்ள வேண்டும்.

முடிந்தளவு ஏதாவது ஒரு சிறிய தொழிலை செய்தால்கூட, ஓரளவுக்கு வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கலாம். அதிலும், குடும்பத்தலைவன் ஊதாரித்தனமாக செலவழிக்காமல், கிடைப்பதில் சிறுதொகையை மிதப்படுத்தி சேமித்துக்கொள்ளவே வேண்டும்.

இந்நிலையில், சிறுவர்கள், பெண் பிள்ளைகள் காணாமல்போகும் சம்பவங்கள் நாட்டில் அதிகரித்துள்ளன. சிறார்களை தன்னுடைய கணவன் அல்லது உறவினர்களின் வீடுகளில் விட்டு, வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாகச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இல்லையேல் சமூக சீரழிவுகளைத் தவிர்க்கவே முடியாது. வேலையில்லாமல் வீடுகளில் இருப்போரும், வீதிகளில் சுற்றிதிரிவோரும், தங்களுடைய வன்கொடுமையை சிறார்களின் மீது காண்பித்துவிடுகின்றனர். இதனால், சில சிறுவர்களின் எதிர்காலமே பூஜ்ஜியமாகிவிடுகிறது.

சிறுவர்களுக்கென ஓர் உலகமிருக்கிறது. அதனை அனுபவிப்பதற்கு இடமளிக்க வேண்டும். நெருக்கடிமிக்க இந்தச் சூழ்நிலையில், குடும்ப சுமையையும் சுமக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையும் சில சிறார்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்புத் தொடர்பில் சிறார்களுக்கு கற்றுக்கொடுக்கவேண்டும். கவனம், அவதானம், பதற்றமின்மை, அச்சத்தை போக்குதல் உள்ளிட்டவற்றில் ஓரளவுக்கேனும் பயற்சி கொடுத்து, மனதைத் திடப்படுத்துவதற்கு கற்றுக்கொடுக்க வேண்டும். இல்லையேல், விறகு சேகரிப்பதற்காக மரத்திலேறிய சிறுவனொருவன், மஸ்கெலியாவில் மரணித்த சம்பவத்தைப் போல எதிர்காலத்தில் இடம்பெறக்கூடும்.

கொரோனா அதற்குப் பின்னரான நெருக்கடியான காலக்கட்டத்தில் கூடுதலான நேரங்களை வீடுகளிலேயே சிறுவர்கள் கழிக்கின்றனர். ஆகையால், பெற்றோரின் அரவணைப்பின் கீழிருக்கும் சந்தர்ப்பம் அதிகமாகும். அந்த நேரங்களில், நல்லபல விடயங்களைக் கற்றுக்கொடுத்து. அவர்களுக்கு பாதுகாப்பாக இருப்பதுடன் பெற்றோர்களாகிய நீங்கள் விழிப்புடன் இருப்பதே காலத்தின் தேவையாகும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# மறக்கப்படுகிறதா தமிழ்த் தேசியம்?



என்.கே. அஷோக்பரன்
Twitter @nkashokbharan

ராஜபக்ஷ எனும் 'கோலியாத்'தை, காலம், சாபம், அவர்கள் செய்த பாவம் என்று எல்லாம் சேர்ந்து வீழ்த்திக் கொண்டிருக்கின்றன என்று சொல்வது பொருத்தமற்றதல்ல!

இலங்கை அரசியலில், அசைக்க முடியாத சக்திகள் தாம் என்பதை, ராஜபக்ஷர்கள் 2019-2020 தேர்தல்களில் நிரூபித்து, இரண்டு வருடங்களுக்கு உள்ளாகவே, நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ராஜபக்ஷர்கள், தமது 2015ஆம் ஆண்டு தோல்விக்குப் பிறகு, திட்டமிட்டு, இனவாத உரத்தைக் கொண்டு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சியை உருவாக்கி, இன-மத தேசியவாதத்தை முன்னிறுத்திப் பெற்ற பெரும் தேர்தல் வெற்றி, இன்று தவிடுபொடியாகிய நிலையில் நிற்கிறது.

2020 பொதுத் தேர்தலில் ராஜபக்ஷர்கள் பெரும் பெரும்பான்மையைப் பெற்றிருந்தார்கள். அந்த நிலையில், தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் கட்சிகளாகக் கருதக்கூடிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகியவற்றின் மொத்த நாடாளுமன்றப் பலம் 13 ஆசனங்கள் மட்டுமே!

இதை, அன்று ராஜபக்ஷர்கள் என்ற மாபெரும் 'கோலியாத்'துக்கு முன்னால், சின்னப்பெடியனான 'டேவிட்'டைப் போல, தமிழ்த் தேசியம் நின்று கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தேன். மேலும், இங்கு, 'டேவிட்'டின் பிரச்சினை, கோலியாத்தை விடச் சிறியதாகவும் பலமற்றும் இருப்பது மட்டுமல்ல; இருக்கும் பலத்தைக்கூட ஒன்றுபடுத்தி, 'டேவிட்'டால் இயங்க முடியாமல் இருப்பதுதான்.

த.தே.கூ, த.தே.ம.மு, த.ம.தே.கூ என்று பிரிந்து நிற்கும் தமிழ்த் தேசிய கட்சிகளும் அவற்றின் நட்பு சக்திகளாகக் கருதக் கூடிய கட்சிகளும், ஒரு தளத்தில் இயங்கினால் மட்டுமே, 'கோலியாத்'தை எதிர்கொள்ள முடியும் என்பது பற்றி, 'டேவிட்' சிந்திக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால், இன்று ராஜபக்ஷர்கள் எனும் 'கோலியாத்' நிலைதடுமாறி முழங்காலில் நின்றுகொண்டிருக்கும் போது கூட, 'தமிழ்த் தேசியம்' எனும் 'டேவிட்' செய்வதறியாது திணறிக் கொண்டுதான் நிற்கிறான். இதற்குக் காரணம், தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு இடையேயான ஒற்றுமையின்மை மட்டுமல்ல, இந்தக் கட்சிகளில் பலவற்றுக்கு இடையே தமிழ்த் தேசியம் பற்றிய புரிதலும், பிடிப்பும் மறக்கப்பட்டுவிட்டதே ஆகும். இது பற்றி ஆராய முன்பு, 'தமிழ்த் தேசியம்' என்றால் என்ன என்ற புரிதலோடு தொடங்குவதே பொருத்தமானதாக இருக்கும்.

'சிங்கள-பௌத்த' பெரும்பான்மை இன-மத தேசியத்துக்கு எதிராக, அதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே, தமிழ்த் தேசியம், ஈழ மண்ணில் விதைகொண்டு, வேர்விட்டது. அதனால்தான், ஏ.ஜே வில்சன் உள்ளிட்ட ஆய்வாளர்கள், இதைத் 'தற்காப்புத் தேசியம்' என்கிறார்கள்.

'தேசிய பற்றின் எழுச்சித் தீக்கு, அந்தத் தேசத்தை அழிக்கும் நோக்கத்துடன் ஆக்கிரமிப்புச் செய்பவரை விட, வேறு யாரும் அதிகம் பங்களிப்பதில்லை' என்ற ராம்சே மயரின் கருத்துப்படி, 'தமிழர்' என்ற ஒற்றை அடையாளத்தின் காரணமாக, பெரும்பான்மை இன-மதத் தேசியவாதத்தாலும் அதன்பாலான இனவெறியாலும், அடக்குமுறைக்கு ஆளான 'தமிழர்'கள், 'இலங்கைத் தமிழர்' என்ற ஒன்றை அரசியல் அடையாளத்தின் கீழ் ஐக்கியமானார்கள்.

தமிழ்த் தேசியம் என்பது, சிங்கள-பௌத்த பெரும்பான்மை இன-மத தேசியத்துக்கு எதிராக, தமிழ் மக்கள் தேர்ந்தெடுத்த எதிர்வினைப் பாதை. பெரும்பான்மை இன-மத தேசிய எழுச்சியை, அதற்கு எதிரானதொரு தற்பாதுகாப்புத் தேசிய எழுச்சியைத் தவிர, தமிழ் மக்கள் வெவ்வேறு வகைகளில் எதிர்கொண்டிருக்க முடியும்; வேறு பாதைகளைத் தேர்ந்தெடுத்திருக்க முடியும்.

1976இல் 'வட்டுக்கோட்டைத் தீர்மானம்' வரை, தமிழ்த் தலைமைகள் சிவில் தேச அடிப்படைகளுக்குள், சிறுபான்மைப் பாதுகாப்புக்காகப் பிராந்திய ரீதியிலான அதிகாரப் பகிர்வையே கோரியிருந்தார்கள். ஆகவே, தமிழ்த் தேசியம், அதன் பாலான தனியரசு என்பவை, மற்றைய முயற்சிகள் அனைத்தும் வெற்றி காணாததாலேயேதான், தமிழ்த் தலைமைகளால் முழுமையாகச் சுவீகரிக்கப்பட்டது என்பதுதான் வரலாற்று உண்மை.

இன்று, தமிழ்த் தேசிய அரசியல் என்பது, 'தாயகம்', 'தேசியம்', 'சுயநிர்ணயம்' என்ற மூன்றையும் முன்னிறுத்தி நிற்கிறது. தமிழ்த் தேசிய கட்சிகள் எல்லாம், இதையே முன்னிறுத்துகின்றன; இதைச் சொல்லியே வாக்கு கேட்கின்றன. நிற்க!

இன்றைய தமிழ்த் தேசிய கட்சிகளும் அதன் அரசியல்வாதிகளும், இதே தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தித்தான் தமிழ் மக்களிடம், குறிப்பாக வடக்கு - கிழக்கு தமிழ் மக்களிடம் வாக்கு வேட்டை நடத்தி, அம்மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்துக்குச் செல்கிறார்கள்.

ஆனால், தமிழ்த் தேசியத்தின் அடிப்படையிலான மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்ட பின்னர் அவர்கள், தமிழ்த் தேசத்தின் அபிலாஷைகளை வென்றெடுக்க என்ன செய்கிறார்கள் என்பது மிகப் பெரிய கேள்விக்குறி?

இன்று, தமிழ்த் தேசிய கட்சிகளில் இருந்து கொண்டு, தமிழ்த் தேசியத்தின் பெயரால் வாக்குப்பெற்று, தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தின் பெயரால் வழங்கிய மக்கள் ஆணையால், பதவிகளை வகித்துக்கொண்டு, தமிழ்த் தேசியத்தைக் கண்டுகொள்ளாமல் விடுவது என்ன நியாயம்?

ஒருவர், சிவில்-தேசத்தை விரும்பும், தாராளவாதியாக இருப்பதில் எந்தத் தவறும் இல்லை. அது, அவரவர் விருப்பம், நம்பிக்கை, கொள்கை என்பவற்றின் பாற்பட்டது. ஆனால், சிவில் தேசத்தை விரும்பும் தாராளவாதக் கொள்கையுடையோர், அந்தக் கொள்கையை முன்னிறுத்தி மக்களாணையைப் பெற்றுவிட்டு, அந்தக் கொள்கையை முன்னிறுத்தி அரசியல் செய்வதில் ஒரு நேர்மை இருக்கிறது. ஆனால், தேர்தல் வெற்றிக்கு 'தமிழ்த் தேசியம்'; தேர்தலில் வென்ற பின்னர், 'சிவில் தேச தாராளவாதம்' என்று இருப்பது, மக்களை ஏமாற்றும் செயலாகும்.

நீங்கள் இலங்கையை ஒரு சிவில் தேசமாகக் கட்டமைக்க விரும்புகிறீர்கள் என்றால், தாராளவாதக் கொள்கையை முன்னிறுத்த விரும்புகிறீர்கள் என்றால், நீங்கள் தேர்தலின் போது, அதைச் சொல்லி, அந்தக் கொள்கையை முன்னிறுத்தும் கட்சிகளில் போட்டியிட்டு வெற்றிபெற வேண்டும். அதுதான் நியாயம்; அதுதான் தர்மம்.

ஆனால், தமிழ்த் தேசிய கட்சியில், தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணயத்தை முன்னிறுத்தி, அதன்பாலான அரசியல் விஞ்ஞாபனத்தை முன்வைத்து, தேர்தலில் தமிழ்த் தேசியத்துக்கு மக்கள் வழங்கிய வாக்குகளைப் பெற்றுக்கொண்டு, பதவி கிடைத்ததும், சிவில் தேசிய தாராளவாதத்தை பரப்புரை செய்வது, வாக்களித்த மக்களை ஏமாற்றும் வேலை!

இதில் இன்னொரு சூழ்ச்சி தங்கியிருக்கிறது. 'இலங்கை' எனும் சிவில் தேசிய அரசைக் கட்டமைக்கும் கனவை, சிலர் முன்வைத்தே வருகிறார்கள். "நாம் யாவரும் இலங்கையர்", "ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்" போன்ற, பகட்டாரவாரப் பேச்சுகள் ஆங்காங்கே ஒலிக்கின்றன. குறிப்பாக, மீளிணக்கப்பாடு தொடர்பான தளங்களில், இந்தப் பேச்சு அதிகம் ஒலிக்கும்.

'இலங்கை' எனும் சிவில் தேசிய அரசைக் கட்டமைக்கும் கனவொன்றும் புதியதல்ல. 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலும், இலங்கையில் இருந்த உயர்குழாம் அரசியல் தலைமைகளின் விருப்பமும் அதுவாகவே இருந்தது.

இதைச் செய்வது நல்ல விடயம். இதைச் செய்ய விரும்புகிறவர்கள், மக்கள் முன்னிலையில் இந்தக் கருத்துகளை முன்வைத்து, தேர்தலில் நிற்க வேண்டும். தம்மை அவர்கள் சிவில் தேசிய கூட்டமைப்பு, அல்லது நாம் அனைவரும் இலங்கையர் முன்னணி என எப்படி வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளலாம். இந்தக் கொள்கையை முன்னிறுத்தி, அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றால், தமது கொள்கைக்கான முறையான மக்களாணையோடு தமது, கருத்தை அவர்கள் முன்வைக்கலாம். இது வரவேற்கப்பட வேண்டியது. இதுதான் நேர்மையான செயல்.

ஆனால், மேற்சொன்னதை செய்வதை விட்டுவிட்டு, தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி வாக்குகளைப் பெற்றுவிட்டு, பிறகு தமிழ்த் தேசியத்தை மறந்துவிடுவது நேர்மையற்ற செயல். இதைச் சிலர் 'துரோகம்' என்றும் விளிப்பார்கள்.

மறுபுறத்தில், தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கும் தமிழ் மக்களும், வாக்களிக்க முதல் ஒன்றுக்கு இரண்டு முறை சிந்திக்க வேண்டும். தமிழ்த் தேசியம் என்றால் என்னவென்றே தெரியாதவர்களுக்கு வாக்களித்துவிட்டு, பிறகு அவர்கள் பதவி கிடைத்தபின் தமிழ்த் தேசியத்தை மறந்துவிட்டு செயற்படும்போது, அவர்களுக்கு 'துரோகி' முத்திரை குத்துவதில் அர்த்தமில்லை.

தமிழ்த் தேசியத்தின் பெயரால், வாக்கு வேட்டை நடத்திவிட்டு, பதவி கிடைத்த பின்னர், ஒரு சிலர் அமைதியாகத் தமது பதவிகளில் இருந்துகொள்ள, வேறு சிலர் இலங்கையின் தேசிய அரசியலில் தம்மைத் தாராளவாத ஜனநாயகவாதிகளாக நிலைநிறுத்துவதற்குப் பாடாத பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு நடுவில், தமிழ்த் தேசியம்தான் மறக்கப்பட்டு விட்டது; இல்லை மறக்கடிக்கப்பட்டு விட்டது.



## வாழ்வியல் தரிசனம்

தங்களுக்கு எல்லாமே தெரியும் என்றால் அது பொய். அத்துடன் அதுகூட, அறியாமையின் ஒருவடிவமாகும். அதேசமயம், எதுவுமே தங்களுக்குத் தெரியாது என்று கூறுவதை அடக்கமான குணாதிசயமாகக் கொள்ளலாம். எந்த அறியாவளிகளும் எல்லாமே தெரிந்தவர்கள் அல்ல!

முழுமையாக அனைத்தையும் தெரிந்திட, புத்திசாலி மூளைக்கே முடியாது. உலகில் தெரிந்தவர்களை விட, தெரியாத பாமரர்களே அதிகம். பரந்த வையகத்தில், அணு முதலாக கோடானகோடி உயிர் உள்ளதும் உயிர் அற்றதுமான சடங்கள் அடங்கியுள்ளன. சடத்துக்கும் உயிரோட்டம் உண்டு. அணுவுக்குள் புரோட்ரோன், நியூட்ரோன், கரு எனப் பல விடயங்கள் உள்ளன. அதில் கூட ஓட்டங்கள், சுழற்சிகள் உள்ளன. எண்ணில் அடங்காத, மனிதர்களுக்குப் புரியாத பல இரகசியங்களைக் கொண்ட உலகம் இது! அணுவைப் பிளந்தால், சக்தி வெளியாகும்.

அத்துடன், கிரகங்கள், நட்சத்திரங்கள், சூரியன், வால்வெள்ளி, உட்பட எல்லையில்லாத பிரபஞ்சத்துக்குள் அடக்கம்.

அதுசரி! அதற்காக நாங்கள் எதைக் கற்றுக் கொள்ளப் முடியும் என நீங்கள் திணறலாம். கல்விக்கு ஏது எல்லை? வாழ்க்கை முழுவதும் அறிவுத் தேடல் தொடரும். சும்மா நாம் இருக்கக் கூடாதல்லவா?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தவும்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட குரவில் கிராமத்தில், அதிகரித்துவரும் போதைப்பொருள் வியாபாரம், பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கிராம மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மாலை வேளையில், பெண்கள் வீதியில் செல்லமுடியாத அளவுக்கு, குரவில் கிராமத்தில் போதைப் பாவனை அதிகரித்துள்ளது. 400 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழும் இந்தக் கிராமத்தில், 250 க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் மத்தியில் ஐஸ், ஹெரோய்ன், கஞ்சா போன்ற போதைப்பொருட்களின் பாவனை அதிகமாகக் காணப்படுகின்றது.

பொலிஸில் முறைப்பாடு செய்தும், எந்தப் பயனும் இல்லை. துஸ்பிரயோகம் அற்ற கிராமமாக எங்கள் கிராமம் காணப்படவேண்டும். வாக்கினை கேட்பவர்கள் என்ன செய்கின்றார்கள்? போதைப்பொருள் பாவனையால் பெண்கள் மிகவும் கஸ்டப்படுகின்றார்கள். குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சிறு பிள்ளைகளை, இந்தப் போதைப்பொருள் வியாபாரத்துக்காகப் பயன்படுத்துகின்றார்கள் எனவும் கிராமத்தவர்கள் தெரிவித்தார்கள். எனவே, கிராமத்தில் இடம்பெறும் போதைப்பொருள் பாவனையினை கட்டுப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இதுதொடர்பான கவனயீர்ப்பு போராட்டமும், பெற்றோர்களால் குரவில் தமிழ் வித்தியாலயத்துக்கு முன்னால், பாடசாலை முடிந்த பின்னர் முன்னெடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



–சண்முகம் தவசீலன்

தேசிய விற்பனை காங்கிரஸ் 2020 விருதுகளில்

# செலான் வங்கிக்கு கௌரவம்

செலான் வங்கி, தேசிய விற்பனை காங்கிரஸ் விருதுகள் 2020 நிகழ்வில், ஒரு தங்கம், இரு வெள்ளி மற்றும் ஐந்து வெண்கல விருதுகளை சுவீகரித்திருந்தது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு 2022 பெப்ரவரி 8 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த விருதுகளை சுவீகரித்திருந்தமையினூடாக, செலான் வங்கியின் விற்பனைப் பயணத்துக்கு மேலும் வலுச் சேர்க்கப்பட்டுள்ளது.



நாட்டின் விற்பனை நிபுணர்களின் அயராத முயற்சி மற்றும் அவர்களின் வினைத்திறனான செயற்பாடுகளை கௌரவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படும் நன்மதிப்பைப் பெற்ற விருதுகள் வழங்கும் நிகழ்வாக SLIM NASCO விருதுகள் அமைந்திருப்பதுடன், 21ஆம் ஆண்டாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த விருதுகள் வழங்கலினூடாக, நாட்டின் சிறந்த விற்பனைப் பிரதிநிதிகளை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இலங்கையின் சிறந்த விற்பனை நிபுணர்கள் எனும் இலச்சினையை அணிவதற்கு ஆர்வத்துடன் எதிர்பார்ப்போருக்கு கைகொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

செலான் வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரட்ன செலான் வங்கியின் வெற்றியீட்டிய விற்பனை செயலணியினருக்கு வாழ்த்துத் தெரிவித்திருந்ததுடன், கருத்துத் தெரிவிக்கையில், "NASCO விருதுகள் வழங்கும் நிகழ்வில் சிறப்பாக செயலாற்றியிருந்த செலான் வங்கி அங்கத்தவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் வளர்ச்சி காண்பதையிட்டு நான் பெருமை கொள்வதுடன், அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தவும், தமது அதீத ஈடுபாட்டை பின்பற்றுவதற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடிந்ததையிட்டு உண்மையில் மகிழ்ச்சியடைகின்றேன். சிறந்த சாதனைகளை வெளிப்படுத்தும் வகையில் விருதுகள் அமைந்துள்ளன என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், எதிர்கால கூட்டாண்மை தலைவர்களின் உருவாக்கத்துக்கு ஏதுவாக அமைந்துள்ளது" என்றார்.

பெறுமதிகளுக்கு முன்னுரிமை வழங்காமல், அணி அங்கத்தவர்களுக்கு அறிவூட்டி, தம்மை வளர்த்துக் கொள்ளக்கூடிய கலாசாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பதில் செலான் வங்கி கவனம் செலுத்துகின்றது. கடந்த நான்கு SLIM NASCO விருதுகள் வழங்கல் நிகழ்வுகளிலும் வங்கி மொத்தமாக பெற்றுக் கொண்ட 19 விருதுகளினூடாக, இலங்கையின் வங்கியியல் துறையில் சிறந்த விற்பனை அணிகளைக் கட்டியெழுப்புவதில் நீண்ட காலமாக காண்பித்து வரும் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

செலான் வங்கியின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் உதவி பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "செலான் வங்கியில், நாம் மேற்கொள்ளும் சகல செயற்பாடுகளிலும் சேவை என்பது மையமாக அமைந்துள்ளது. எமது விற்பனை அணியினர் இதனை கவனத்தில் கொண்டு, வாடிக்கையாளர் சௌகரியம் என்பதற்கு முன்னுரிமையளித்து செயலாற்றுகின்றனர். அதனூடாக வங்கிச் சேவைகளை வாடிக்கையாளர்களின் வாயிலுக்கு கொண்டு செல்கின்றனர். முன்னேறுவதற்கான அவர்களின் திறன்கள், அர்ப்பணிப்பு ஆகியன இந்த விருதுகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அமைந்திருந்தன. அவர்களின் சாதனைகள் கௌரவிக்கப்படுகின்றமையை காண்பது உண்மையில் மகிழ்ச்சியாக உள்ளதுடன், வங்கியியல் துறையில் விற்பனையை தொழில்நிலையாக தெரிவு செய்திருந்தமையின் பயனை அவர்களால் அனுபவிக்க முடிந்துள்ளது" என்றார்.




லிபர்டி பிளாஸா குடியிருப்பாளர்களுக்கு

# SLT-MOBITEL இன் மேம்படுத்திய தீர்வுகள்

SLT-MOBITEL, லிபர்டி பிளாஸா தொகுதியின் உரிமையாளர்களான கொழும்பு லான்ட் அன்ட் டிவலப்மன்ட் கம்பனி பிஎல்சியுடன் கைகோர்த்து, லிபர்டி பிளாஸாவின் குடியிருப்பாளர்களுக்கு அதிவேக ஃபைபர் இணைப்புகள், நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளது.

இதற்கான உடன்படிக்கையில் SLT இன் பிரதம பிராந்திய விற்பனை அதிகாரி இமந்த விஜேகோன் மற்றும் லிபர்டி பிளாஸா சங்கத்தின் அங்கத்தவரான பெடி வீரசேகர ஆகியோர் கைச்சாத்திட்டதுடன், இந்நிகழ்வில் இரு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையின் புகழ்பெற்ற கலப்பு அபிவிருத்தித் தொகுதிகளில் ஒன்றாக லிபர்டி பிளாஸா கருதப்படுவதுடன், கொழும்பின் மையப்பகுதியில் குடியிருப்பாளர்களுக்கு பணியாற்றுவது, தங்குமிடம் மற்றும் சொப்பிங் போன்ற அனுபவங்களை வழங்குகின்றது. இந்தத் தொகுதி 160,000 சதுர அடி பரப்பளவைக் கொண்டிருப்பதுடன், 300 க்கும் அதிகமான விற்பனைப் பகுதிகள், அலுவலகங்கள், வதிவிடப்பகுதிகள் போன்றவற்றுடன், 250க்கும் அதிகமான வாகனத் தரிப்பிட வசதிகளையும் கொண்டுள்ளது.

SLT இன் பிரதம பிராந்திய விற்பனை அதிகாரி இமந்த விஜேகோன் கருத்துத் தெரிவிக்கையில், "சொப்பிங், அலுவலக இடவசதி, வதிவிடம் ஆகியவற்றுக்கான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக லிபர்டி பிளாஸா அமைந்துள்ளது. லிபர்டி பிளாஸா நிர்வாக சங்கத்துடன் இணைந்து, அடுத்த தலைமுறை ஃபைபர் வலையமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். SLT-MOBITEL இன் நவீன வசதிகள் படைத்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளினூடாக, ஒன்றிணைக்கப்பட்ட தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்பதுடன், plug-and-play இணைப்புத்திறன், அதிகளவு பயன்படுத்தக்கூடிய அடர்த்தி மற்றும் சகல குடியிருப்பாளர்களின் சமகால மற்றும் எதிர்கால தேவைகளுக்கான நீண்ட கால அடிப்படையிலான பெறுமதி சேர்ப்பு போன்றன வழங்கப்படும்" என்றார்.

SLT-MOBITEL' இன் மேம்படுத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதியுடன், குடியிருப்பாளர்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் எல்லைகளற்றவையாக அமைந்துள்ளன. அலுவலகங்களுக்கு நவீன தொழில்நுட்பம், அதிவேக இணைய வசதி, குரல் தீர்வுகள் போன்றவற்றை பெற்றுக் கொள்ள முடிவதுடன், எதிர்காலத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இவை அமைந்துள்ளன. லிபர்டி பிளாஸா குடியிருப்பாளர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தினூடாக டிஜிட்டல் வாழ்க்கை முறையை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன், ஒன்றுக்கு மேற்பட்ட சாதனங்களினூடாக, ஒன்லைன் கேமிங் மற்றும் பல அம்சங்களை அனுபவிக்க முடியும். அத்துடன் உலகத் தரம் வாய்ந்த PEO TV களிப்பூட்டும் அம்சங்களையும் அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

இந்த முன்னேற்றம் தொடர்பாக லிபர்டி பிளாஸா நிர்வாக சங்கத்தின் அங்கத்தவர் பெடி வீரசேகர கருத்துத் தெரிவிக்கையில், "எமது குடியிருப்பாளர்கள் மற்றும் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்களுக்கு அதிவேக ஃபைபர் இணைப்புகளையும், இதர உயர் தரமான குரல் அழைப்பு வசதிகளையும் வழங்குவதற்காக SLT-MOBITEL உடன் கைகோர்த்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இந்தத் திட்டம் பூர்த்தியடைந்ததும், சகல உரிமையாளர்களுக்கும், வாடகைக்கு அமர்த்தப்பட்டிருப்பவர்களுக்கும், பெருமளவு அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இலங்கையில் காணப்படும் முன்னணி கலப்பு அபிவிருத்தித் திட்டமாக அமைந்திருப்பதுடன், முன்னணி தொலைத் தொடர்பாடல் சேவை வழங்குநருடன் கைகோர்ப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்" என்றார்.

புதுடெல்லி

ராகுல் வலியுறுத்தல்

# வெறுப்பு, அமைதியின்மை இந்தியாவின் பாதை அல்ல

இந்தியா எப்போதும் உண்மை, அகிம்சை, சகோதரத்துவத்துக்கு முன்னுதாரணமாக உள்ளது. வெறுப்பும் அமைதியின்மையும் நமது பாதை அல்ல என ராகுல் காந்தி கூறி உள்ளார். முஹமது நபி பற்றி பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மா தெரிவித்த சர்ச்சையான கருத்தைக் கண்டித்து, நாடு முழுவதும் வெள்ளிக்கிழமை (03) போராட்டம் வெடித்தது.



உத்தர பிரதேசம், ஜார்க்கண்ட், மேற்கு வங்கத்தில் பெரும் கலவரங்கள் வெடித்தன. இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக, காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி சனிக்கழமை (04) டிவிட்டர் பதிவில், 'மகாத்மா காந்தியின் இலட்சியங்களே சுதந்திர இந்தியாவின் அடித்தளமாகும். இந்தியா எப்போதும் உண்மை, அகிம்சை, சகோதரத்துவத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது. வெறுப்பும், அமைதியின்மையும் நமது பாதை அல்ல. இந்தியாவை ஒன்றிணைப்பதும், பரஸ்பர நல்லுறவை பேணுவதும் நாட்டின் அனைத்து மக்களின் பொறுப்பாகும்' என வலியுறுத்தி உள்ளார்.

மதுரை

# ஒரு கட்டு வாழை இலை ரூ.5,000


கோவில் திருவிழா, திருமணம் என்பன களை கட்ட ஆரம்பித்துள்ளதால் 250 இலைகள் கொண்ட ஒரு கட்டு வாழையிலை இந்திய ரூபாய் 4,000 முதல் 5,000 ரூபாய் வரை விலை உயர்ந்து விற்பனையாகிறது.

மதுரை மாவட்டம் சோழவந்தான், திருமங்கலம், வாடிபட்டி, உசிலம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வாழை அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. 'கொரோனா' ஊரடங்கு காலத்தில் வாழை இலைகளுக்கு தேவை குறைந்ததால், 250 இலைகள் கொண்ட ஒரு கட்டு ரூ.100 முதல் ரூ.150 வரையே விற்பனையானது. இதனால் நஷ்டமடைந்த விவசாயிகள், மற்ற காய்கறிகள் விவசாயத்துக்கு மாறினர். இவ்வாறு மதுரை சுற்றுவட்டாரப் பகுதியில் 50 சதவீதத்துக்கும் மேலான வாழை விவசாயம் அழிந்து போனதால் தற்போது வாழை இலைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

சென்னை

இணைய சூதாட்ட விளையாட்டுகளை

# முறைப்படுத்த சிறப்பு குழு



ரம்மி உள்ளிட்ட இணைய சூதாட்ட விளையாட்டுக்கள் இந்தியாவில் முறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன. பொறுப்பின்றி அந்த விளையாட்டுகளில் ஈடுபட்டு வாழ்நாள் சேமிப்பு முழுவதையும் இழப்பவர்கள் வாழ்வையும் முடித்துக்கொள்கிறார்கள்.

தற்போது முதலமைச்சர் ஸ்டாலின் இணைய ரம்மியை தடை செய்ய சிறப்பு குழு அமைத்துள்ளார். ஓய்வுபெற்ற நீதிபதி சந்துரு தலைமையில், ஐ.ஐ.டி தொழில்நுட்ப நிபுணர் டொக்டர் சங்கரராமன், தற்கொலை மீட்பு அமைப்பான 'ஸ்நேகா' அமைப்பின் நிறுவனரும், உளவியலாளருமான டொக்டர் லட்சுமி விஜயகுமார், பொலிஸ் துறை கூடுதல் டி.ஜி.பி வினித் தேவ் வான்கடே ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்து வகையான இணைய விளையாட்டுகளில் இந்தியாவின் சந்தை மதிப்பு 2019இல் 4.6 இலட்சம் கோடி இந்திய ரூபாயாக இருந்தது. 2024இல் இதன் மதிப்பு சுமார் 15 இலட்சம் கோடியாக இருக்கும் என கணிக்கப்படுகின்றது. இதில் ஆன்லைன் ரம்மி விளையாட்டுகளின் சந்தை மதிப்பு மட்டும் 2019இல் ரூ.2,500 கோடியாக இருந்தது. ஆண்டுக்கு 10% அளவுக்கு வருவாய் உயர்கிறது. 2026இல் இதன் வருவாய் இருமடங்காகும்.

இந்தியாவில் கொவிட்-19 பெருந்தொற்று ஊரடங்கு சமயத்தில் தான், இணைய விளையாட்டுகள் அதிகம் பிரபலமாகின. இதனால்த்தான் சூதாட்ட விளையாட்டுகளின் சந்தை மிக வேகமாக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வளர்ச்சிக்கண்டது.

பொழுதுபோகவில்லை என ஆரம்பிக்கும் இந்த விளையாட்டுக்குள் இறங்கும் பலர், முதலில் சிறு தொகையை வைத்து ஆடுகின்றனர். அதில் வெற்றியடைந்து பணம் வெல்பவர்கள், 'அதிக தொகையை கட்டினால் அதிகம் கிடைக்குமே' என எண்ணி அதிக பணத்தை இறக்குவர். தோல்வி அடைந்தால், விட்டதை பிடிக்கிறேன் என மீண்டும் பணத்தை இறக்கி, அனைத்தும் கரைத்துவிடுவர்.

ஆர்.என்.ஜி., (Random Number Generator) 'அல்காரிதம்' அதிநுணுக்கமாக உருவாக்கப்பட்டது. நீங்கள் தோல்வி அடைந்ததும் எவ்வளவு துரிதமாக மற்றுமோர் ஆட்டத்தை ஆரம்பிக்கிறீர்கள், பண இருப்பு கரைந்ததும் எவ்வளவு வேகமாக மீண்டும் 'ரீசார்ஜ்' செய்கிறீர்கள் என்பவற்றை வைத்து, நீங்கள் அடிமையாகி விட்டீர்களா, இல்லையா என்பதையும் 'அல்காரிதம்' கண்டுகொள்ளும்.

சென்னை

சிக்குவாரா அண்ணாமலை?

# வலை விரித்தது ஸ்டாலின் அரசாங்கம்

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலையை, தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய, திராவிட முன்னேற்ற கழக அரசாங்கம் திட்டமிடும் தகவல் வெளியாகியுள்ளது. தமிழக பா.ஜ.க தலைவராக அண்ணாமலை பொறுப்பேற்றது முதல், தி.மு.க அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து வருகிறார்.

கொரோனா காலத்தில் கோவிலை திறக்கக் கோரி நடத்திய போராட்டம், மின் வாரியம் ஒப்பந்தம் தொடர்பான குற்றச்சாட்டு, பட்டினப் பிரவேச தடைக்கு எதிரான குரல், கர்ப்பிணிகளுக்கான ஊட்டச்சத்து வாங்கியதில் 77 கோடி ரூபாய் முறைகேடு, 'ஜி ஸ்கொயர்' என்ற தனியார் நிறுவனத்துக்கு கட்டுமான அனுமதிகளில் தாராள சலுகைகள், தி.மு.க அரசாங்கத்துக்கு எதிராக குற்றச்சாட்டுகளை அண்ணாமலை சுமத்தினார். இதெல்லாம், தி.மு.கவுக்கு கடும் நெருக்கடிகளை ஏற்படுத்திஉள்ளன.

அரசுக்கு தொடர்ந்து குடைச்சல் கொடுத்து வரும் அண்ணாமலையை, எப்படியாவது சிக்க வைக்க வேண்டும் என, தி.மு. கவினர் திட்டமிட்டு வந்தனர். அண்ணாமலை, ஐ.பி.எஸ் அதிகாரியாகக் பணியாற்றிய கர்நாடகாவில், அவருக்கு எதிராக ஏதாவது சிக்குமா என, தி.மு.க தரப்பில் ஆராயப்பட்டது. 'அண்ணாமலையை சிக்க வைக்கும் அளவுக்கு, வில்லங்கம் எதுவும் இல்லை' என, அங்கிருந்து கூறப்பட்டது.

இந்நிலையில், பா.ஜ.க, தலைமையிலான மத்திய அரசாங்கம் எட்டாண்டுகளை நிறைவு செய்ததை ஒட்டி, 'டுவிட்டர்' பக்கத்தில் அண்ணாமலை, ஒரு பதிவு வெளியிட்டார். அது, குறிப்பிட்ட சமூகத்தை இழிவுபடுத்தி விட்டதாக கூறி, தி.மு.கவும் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகளும், ஆதரவாளர்களும், தமிழகம் முழுதும் பொலிஸில் புகார் அளித்துள்ளனர்.

இதை பயன்படுத்தி, எஸ்.சி, எஸ்.டி பிரிவினருக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில், அண்ணாமலையை கைது செய்ய, தி.மு.க அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.


இதன் பின்னும் அண்ணாமலை, தன் பதிவை நீக்கவில்லை. "அண்ணாமலையை கைது செய்தால், அவர் மேலும் பிரபலமாகி விடுவார். மத்திய அரசின் எதிர்வினையை சந்திக்க வேண்டியிருக்கும்" என ஒரு தரப்பினரும், "வன்கொடுமைச் சட்டத்தில் கைது செய்ய கிடைத்த வாய்ப்பை தவற விடக் கூடாது" என, மற்றொரு தரப்பினரும் கூறுவதாக, தி.மு.கவினர் தெரிவிக்கின்றனர். பொலிஸ் அதிகாரிகள், கூட்டணி கட்சி தலைவர்களிடம், இது தொடர்பாக, முதலமைச்சர் ஸ்டாலின் ஆலோசித்து வருகிறார்.



புதுச்சேரி

'ஒபரேஷன் விடியல்'

# ரவுடிகளின் வீடுகளில் அதிரடி சோதனை



புதுச்சேரியில் குற்ற சம்பவங்களை தடுக்கும் வகையில் 'ஒபரேஷன் விடியல்' என்ற பெயரில் ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ரவுடிகளின் வீடுகளில் அதிரடி சோதனை இடம்பெற்று வருகின்றது.

வீடுகளில் வெடிகுண்டு, ஆயுதங்கள் வேறு ஏதாவது பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா என சோதனை செய்து, அவர்கள் தற்போது குற்ற சம்பவங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனரா அல்லது குற்றவாளிகளுக்கு உறுதுணையாக இருந்து வருகிறார்களா எனவும், விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கனடா

# எச்சரிக்கும் சிகரெட்டுகள்

கனடாவில் புகைப்பிடிப்பதால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் வகையிலும், அது குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையிலும், ஒவ்வொரு சிகரெட்டின் மீதும் எச்சரிக்கை வாசகம் ஒன்றைப் பதிவு செய்ய அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளது.

இது குறித்து கனடாவின் மனநலம் மற்றும் போதைக்கு அடிமையாதல் துறைக்கான அமைச்சர் கரோலின் பென்னட் கருத்துத் தெரிவிக்கையில், "புகைப்பிடிக்கச் செல்லும் இளைஞர்கள், சிகரெட் பெட்டியின் மீது உள்ள எச்சரிக்கை வாசகங்களைப் புறந்தள்ளிவிட்டு செல்கின்றனர். எனவே, வருகின்ற 2023 வருடத்தின் இரண்டாவது அரையாண்டிலிருந்து ஒவ்வொரு சிகரெட்டின் மீதும், எச்சரிக்கை வாசகம் பதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதோடு,




ஒவ்வொரு தடவையும் இழுக்கும்போது, விஷம் உள்ளே செல்கிறது" என்ற வாசகம் பதிக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனால், உலக அளவில் ஒவ்வொரு சிகரெட்டின் மீதும் எச்சரிக்கை வாசகம் பதிக்கும் முதல் நாடாக கனடா மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனா

# சீனா-ரஷ்யா இடையில் பாலம்

ரஷ்யாவையும், சீனாவையும் இணைக்கும் முதல் பாலம், வெள்ளிக்கிழமை (10) ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ரஷ்ய நகரமான பிளாகோவெஷ்சென்ஸ்க்கை, சீனாவின் ஹெய்ஹேயுடன் இணைக்கும் வகையில் அமுர் ஆற்றின் குறுக்கே, இப்பாலம் கட்டப்பட்டு உள்ளதாகத்



தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 19 பில்லியன் ரூபிள் செலவில் (342 மில்லியன் அமெரிக்க டொலர்) கட்டப்பட்ட இப் பாலம், சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளம் கொண்டது.

இந்நிலையில், 10 ஆம் திகதி இரு நாடுகளின் வண்ண கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த இப் பாலத்தில், இரு முனைகளில் இருந்தும் கனரக வாகனங்கள் கடந்து சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரித்தானியா

# ஒரு விரலில் உலக சாதனை

பிரித்தானியாவைச் சேர்ந்த ஸ்டீவ் கீலர், தனது ஒற்றை விரலால் 129 கிலோ கிராம் எடையைத் தூக்கி, புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம் அவர் 10 ஆண்டுகால உலக சாதனையை முறியடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா

# பிளாஸ்டிக்கை உண்ணும் புழுக்கள்

பிளாஸ்டிக்கை உணவாக உட்கொள்ளும் புழுக்களை அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துச் சாதனை படைத்துள்ளனர்.

சூப்பர் புழுக்கள் என அழைக்கப்படும் இப்புழுக்களில் குடலில் பொலிஸ்டீரைன், ஸ்டீரைனை அழிக்கக்கூடிய நொதியம் இருபது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதுகுறித்துப் பேசிய தலைமை ஆராய்ச்சியாளர் டொக்டர் ரிஸ்கே, "இந்த சூப்பர் புழுக்களுக்கு பொலிஸ்டீரைன் மட்டுமே உணவாக கொடுக்கப்பட்டது. அவை உயிர் பிழைத்தது மட்டுமல்லாமல் அவற்றின் எடையும் அதிகரித்திருப்பதை கண்டறிந்துள்ளோம். இவற்றின் குடலில் உள்ள நொதிகளின் மூலமாக பொலிஸ்டீரைனை எளிதில் உட்கொள்கின்றன. இவை ஒரு



சிறிய மறுசுழற்சி ஆலைகளை போன்று செயற்படுகின்றன. அவை பொலிஸ்டீரைனை துண்டுகளாக்கி, அவற்றை தன் குடலில் உள்ள பக்றீரியாக்களுக்கு அனுப்புகிறது. இவ் வகை புழுக்களை அதிகளவில் உருவாக்குவது சிரமான காரியம் என்றாலும், இவற்றின் குடலில் சுரக்கும் நொதியத்தை ஆய்வுக்கு உட்படுத்தி, அதில் இருக்கும் பக்றீரியா மூலமாக பிளாஸ்டிக் மறுசுழற்சியை வேறு பரிமாணத்திற்கு எடுத்துச் செல்லலாம்" என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இக் கண்டுபிடிப்பானது உலக நாடுகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

# அரச அதிகாரிகள் கார் வாங்க தடை

பாகிஸ்தான், அண்மைக் காலமாக, கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகின்றது.

குறிப்பாக பாகிஸ்தானிடம் அந்நிய செலாவணி கையிருப்பு குறைவாக உள்ளதால், வரும் நாள்களில் நெருக்கடி மேலும் அதிகரிக்கும் நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சர்வதேச நாணய நிதியத்திடம் பாகிஸ்தான் அரசு கடன் உதவி வழங்குமாறு கோரி வருகின்றது.

இந்நிலையில் நிதி பற்றாக்குறையை கட்டுப்படுத்தவும் சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்பு பணத்தை பாதுகாக்கவும் பாகிஸ்தான் அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவு திட்டத்தை வெளியிடும் அமைச்சர் இஸ்மாயில் கருத்துத் தெரிவிக்கையில், "நாட்டில் நிலவும் நெருக்கடி காரணமாக பணக்காரர்கள் மீதான வரியை உயர்த்தவும், அரசு அதிகாரிகள் புதிய கார் வாங்கவும் தடை விதிக்கப்படவுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

கனடா

# சோகத்தில் ஜஸ்டின் பெய்பர் ரசிகர்கள்

மிக இளம் வயதிலேயே தனது பாடல்கள் மூலம் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களைப் பெற்றவர் ஜஸ்டின் பெய்பர்.

கனடாவைச் சேர்ந்த இவர் இசைக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான 'கிராமி' விருதையும் பெற்றுள்ளார். இந்நிலையில் அவர் அண்மையில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள வீடியோவானது உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த வீடியோவில் அவர், "எனது முகத்தின் பாதியை செயலிழக்கச் செய்யும் ஒரு நோய் அறிகுறி கண்டறியப்பட்டுள்ளது. இந்த அறிகுறி 'ராம்ஸே ஹண்ட்ஸ்' என சொல்லப்படுகிறது.

ஒரு வகை வைரஸால் உருவாகும் இப் பிரச்சினை, நரம்பு மண்டலத்தைத் தாக்கக் கூடியது.

நான் எனது அடுத்தடுத்த சுற்றுப்பயணங்களை இரத்து செய்துள்ளதால் பலரும் அதிருப்தி அடைந்து இருப்பீர்கள். என்னால் இப்போது உடல்ரீதியாக அதை செய்ய முடியாது. நான் மீண்டும் இயல்பு நிலைக்கு வரும் வரை, எனது சுற்றுப்பயணங்களை ஒத்தி வைக்கிறேன். இயல்பு நிலைக்கு வர எவ்வளவு காலம் ஆகும் எனத் தெரியவில்லை. உங்கள் அன்பையும் பிராத்தனைகளையும் கொடுங்கள்" என உருக்கமாக பேசியுள்ளார்.

இவ் வீடியோ, அவரது ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

# அவுஸ்திரேலியாவை வென்ற இலங்கை

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் இலங்கை வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பல்லேகலவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் ஆரோன் பின்ஞ், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, டேவிட் வோர்னரின் 39 (33), பின்ஞ்சின் 29 (20), கிளென் மக்ஸ்வெல்லின் 16 (09), ஸ்டீவ் ஸ்மித்தின் ஆட்டமிழக்காத 37 (27), மார்க்கஸ் ஸ்டொய்னிஸின் 38 (23), மத்தியூ வேட்டின் ஆட்டமிழக்காத 13 (08) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மகேஷ் தீக்‌ஷன 4-0-25-2, சாமிக கருணாரத்ன 3-0-19-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 177 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை சார்பாக தனுஷ்க குணதிலக 15 (12), பதும் நிஸங்க 27 (25), சரித் அஸலங்க 26 (19), பானுக ராஜபக்‌ஷ 17 (13) ஓட்டங்களைப் பெற்றபோதும் ஜொஷ் ஹேசில்வூட் (2), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் (2), அஸ்தன் அகரிடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை



இழந்து தடுமாறியது.

பின்னர் அணித்தலைவர் தசுன் ஷானகவின் ஆட்டமிழக்காத 54 (25), சாமிக கருணாரத்னவின் ஆட்டமிழக்காத 14 (10) ஓட்டங்களோடு 19.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 2-0-8-2, ஜொஷ் ஹேசில்வூட் 4-1-25-2, அஸ்தன் அகர் 4-0-23-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஷானகவும், தொடரின் நாயகனாக பின்ஞ்சும் தெரிவாகினர்.

வல்வை வி.க தொடர்

# அரையிறுதியில் மயிலங்காடு ஞானமுருகன்

தனது வைர விழாவை முன்னிட்டும், மறைந்த வீரர்கள் ஞாபகார்த்தமாகவும் நடத்தும் ஒன்பது நபர் கொண்ட மாபெரும் வட மாகாண ரீதியிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்துடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றது.

ஞானமுருகன் சார்பாக, விஷின்டன், பார்த்தீபன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, யங்கம்பன்ஸ் சார்பாகப் பெற்ற கோலை குருதரன் பெற்றிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக ஞானமுருகனின் சர்மிலன் தெரிவானார்.






இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# ஆதிக்கம் செலுத்தும் நியூசிலாந்து


இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் நியூசிலாந்து ஆதிக்கம் செலுத்துகிறது.

நொட்டிங்ஹாமில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இந்த டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட நியூசிலாந்து, டரைல் மிற்செல்லின் 190, டொம் பிளன்டெல்லின் 106, டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்ட மிஷெல் பிறேஸ்வெல்லின் 49, வில் யங்கின் 47, டெவோன் கொன்வேயின் 46, ஹென்றி நிக்கொல்ஸின் 30, பதிலணித்தலைவர் டொம் லேதமின் 26 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 553 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜேம்ஸ் அன்டர்சன் 3, அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் 2, ஜேக் லீச் 2, ஸ்டூவேர்ட் ப்ரோட் 2, மத்தியூ பொட்ஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து, நேற்று முன்தின இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் ஒலி போப் 51 ஓட்டங்களுடனும், அலெக்ஸ் லீஸ் 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை ட்ரெண்ட் போல்ட் வீழ்த்தியிருந்தார்.

தேசங்களுக்கான லீக் தொடர்

# சமநிலையில் ஜேர்மனி ஹங்கேரி போட்டி



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரில், ஹங்கேரியில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை ஜேர்மனி 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியது.

இதேவேளை, தம் நாட்டில் நடைபெற்ற பெல்ஜியத்துடனான போட்டியையும் 1-1 என்ற கோல் கணக்கில் வேல்ஸ் சமப்படுத்தியது.

தவிர, தம் நாட்டில் நடைபெற்ற இத்தாலியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து சமப்படுத்தியிருந்தது.

இந்நிலையில், தமது நாட்டில் நடைபெற்ற போலந்துடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து சமப்படுத்தியிருந்தது.

இலங்கை தேசிய இளையோர் சதுரங்க சம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க

# அம்பாறையிலிருந்து எழுவர் தெரிவு



அஸ்ஹர் இப்றாஹிம்

புரோ நைட்ஸ் சதுரங்க அகடமியின் ஏழு வீரர்கள் தேசிய மட்ட சதுரங்க போட்டிக்கு அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை தேசிய இளையோர் சதுரங்க சம்பியன்ஷிப் போட்டியின் அம்பாறை மாவட்ட மட்டத்திலான எட்டு வயதுக்குட்பட்ட, 14 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான தெரிவுப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.

14 வயதுக்குட்பட்ட திறந்த போட்டியில் ஏ.ஏ.பர்விஸ் சம்பியனாகவும், ஐ.கே. முஹம்மட் ஆகில் கான் இரண்டாமிடத்தையும், எம்.இஸட்.எம். ஸானிப் மூன்றாமிடத்தையும், எம்.ஜே.ஐ. ஸஹ்மி தேசிய மட்டப் போட்டிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், எட்டு வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் என்.எம். பாதிஹ் சம்பியனாகவும், எம்.ஏ.எம். மஹ்தி இரண்டாமிடத்தையும், கே.என்.எஸ். நஜ்தி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் திங்கட்கிழமை, 13 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.